வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959
Reg. No. : P. 1632
விலை ரூ. 30/=

ஈழநாடு
Eelanadu




Email : eelanaduweekly@gmail.com  மலர் : 05  24.07.2024 புதன்கிழமை  இதழ் : 206  பக்கங்கள் : 12

# முஸ்லிம் சமூகத்தினரிடம் மன்னிப்புக் கேட்டது அரசு!

கொழும்பு, ஜூலை 24

**கோவிட் பெருந்தொற்றால் உயிரிழந்த முஸ்லிம்களின் ஜனாஸாக்கள் (சடலங்கள்) பலவந்தமாக தகனம் செய்யப்பட்டமைக்கு அரசாங்கம் மன்னிப்புக் கோரியது.**

**பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ இந்த மன்னிப்பை கோரினார்.**

கோவிட் பெருந்தொற்று காலத்தில் உயிரிழந்த முஸ்லிம் மக்களின் ஜனாஸாக்கள் பலவந்தமான முறையில் தகனம் செய்யப்பட்டன. இந்த விடயம் குறித்து நீர்ப்பாசனத்துறை அமைச்சு அறிவியல் ரீதியில் முன்னெடுத்த ஆய்வு அறிக்கைக்கு அமைய வெளிவிவகாரத்துறை அமைச்சர் அலி சப்ரி, நீர்வழங்கல் அமைச்சர் ஜீவன் தொண்டமான் உட்பட நான் ஒன்றிணைந்து கூட்டாக சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

முஸ்லிம் சமூகத்தின் ஜனாஸாக்கள் பலவந்தமான முறையில் தகனம் செய்யப்பட்டமைக்கு மன்னிப்புக் கோரும் வகையில் அமைச்சரவை பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. ஆகவே, முஸ்லிம் சமூகத்திடம் மன்னிப்பு கோருகிறோம் - அத்துடன் கவலையடைகிறோம் - என்றும் அவர் குறிப்பிட்டார். (ஐ)

## கறுப்பு ஜூலைக்காக தமிழரிடம் மன்னிப்பு

### தனிப்பட கோரிய நீதி அமைச்சர்!

கொழும்பு, ஜூலை 24

41 வருடங்களுக்கு முன்னர் நடந்த கறுப்பு ஜூலை சம்பவத்துக்காக தமிழ் மக்களிடம் நாட்டின் பிரஜை என்ற ரீதியில் மன்னிப்புக் கோருவதாக நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.

நேற்று பாராளுமன்றில் உரையாற்றிய நீதி

11

## அமைதியை நிலைநாட்ட முப்படைகளுக்கும் உத்தரவு

கொழும்பு, ஜூலை 24

நாட்டில் அமைதியை பேணுவதற்கு தயார் நிலையில் இருக்குமாறு முப்படைகளுக்கும் ஜனாதிபதி உத்தரவு பிறப்பித்துள்ளார்.

பொதுமக்கள் பாதுகாப்பு கட்டளை சட்டத்தின் 12ஆம் பிரிவில் அவருக்கு அளிக்கப்பட்ட

11

## முஸ்லிம்களிடம் மன்னிப்பு கேட்க அனுமதியளித்தது அமைச்சரவை!

கொழும்பு, ஜூலை 24

கொரோனா வைரஸ் தொற்று பரவலின் போது இலங்கையில் நடைமுறைப்படுத்தப்பட்ட கட்டாய தகன முறைமையால் பாதிக்கப்பட்ட சமூகத்தினரான முஸ்லிம் மக்களிடம் அரசாங்கம் மன்னிப்பு கோரும் பிரேரணைக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியிருந்தது.

அமைச்சரவையின் முடிவுகளை அறிவிக்கும் நேற்றைய செய்தியாளர் சந்திப்பில் அரச பேச்சாளரும் அமைச்சருமான பந்துல குணவர்த்தன இதனைத் தெரிவித்தார்.

கோவிட் - 19 மருத்துவ முகாமை குறித்து சுகாதார அமைச்சு வெளியிட்ட வழிகாட்டல்களின்படி தொற்றால் இறந்தவர்களின் உடல்களை

11

## ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் பாராளுமன்றில்வாக்குவாதம்!

கொழும்பு, ஜூலை 24

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை ஆளும் - எதிர்க்கட்சிகளிடையே கடும் கருத்து மோதல்கள் நடந்தன.

நேற்று செவ்வாய்க்கிழமை பாராளுமன்றில் ஜனாதிபதித் தேர்தல் நடைபெறுமா என்று விசேட கூற்றை முன்வைத்து அத்துரலிய தேரர் உரையாற்றினார்.

அவர் தனது உரையில், "தற்போதைய ஜனாதிபதியை நியமித்துள்ளது மக்கள் அல்ல பாராளுமன்றம்தான். அதனால், ஆளும் மற்றும் எதிர்க்கட்சியில் உள்ள அனைவருக்கும் பொறுப்புள்ளது. நாட்டில் ஜனநாயகம் இல்லாவிட்டால் அது மிகவும் பாரதூரமானது.

மாகாண சபைத் தேர்தல் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. மாகாண சபை தேர்தல்

11

## பெரமுனவின் கூட்டத்தில் ரணிலுக்கு ஆதரவாக குரல்!

### வேட்பாளர் முடிவு அடுத்த வாரம்

கொழும்பு, ஜூலை 24

ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவுக்கே பொதுஜன பெரமுன ஆதரவளிக்க வேண்டும் என்று அந்தக் கட்சியின் கூட்டத்தில் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க வலியுறுத்தியுள்ளார். அவரின் இந்தக் கருத்தை கூட்டத்தில் பங்கேற்ற ஒரு பகுதியினர் ஆதரித்துள்ளனர்.

எனினும், அவரின் கருத்துக்கு எதிராக பொதுஜன பெரமுன ஜனாதிபதி வேட்பாளர் ஒருவரை நிறுத்த வேண்டும் என்று திஸ்ஸ குட்டியாராச்சி

11

## கோட்டாபய மாலைதீவு செல்ல விமானப் படையே செலவிட்டது!

கொழும்பு, ஜூலை 24

ஜனாதிபதியாக கோட்டாபய ராஜபக்ஷ இருந்தபோது மக்கள் கிளர்ச்சியை அடுத்து மாலைதீவுக்கு தப்பியோடினார். 2022 ஜூலை 13ஆம் திகதி அவர் நாட்டிலிருந்து மாலைதீவுக்கு தப்பிச் சென்றிருந்தார். விமானத்தில் அவர் தப்பிச் செல்ல விமானப் படையின் நிதியே பயன்படுத்தப்பட்டுள்ளது என்று இப்போது அறிய வந்துள்ளது.

தகவல் அறியும் உரிமை சட்டத்தின் மூலமாக இந்தத் தகவல் வெளிப்பட்டுள்ளது.

11

## பெரமுன பரிந்துரைக்கும் வேட்பாளர் போட்டியிடுவார்!

### மகிந்த ராஜபக்ஷ தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 24

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் பொதுஜன பெரமுன கட்சியால் பரிந்துரைக்கப்படும் வேட்பாளர் போட்டியிடுவார் என்று முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பொதுஜன பெரமுன கட்சியின் தலைமை பணிமனையில் நேற்று செவ்வாய்க்கிழமை மகிந்த ராஜபக்ஷ தலைமையில் கலந்துரையாடல் நடைபெற்றது. இதன் பின்னர் செய்தியாளர்களிடம் கருத்து வெளியிட்ட அவர்,

11

## கறுப்பு ஜூலை நினைவேந்தல் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது!

கொழும்பு, ஜூலை 24

தமிழ் மக்கள்மீது கட்டவிழ்த்து விடப்பட்ட கறுப்பு ஜூலை கலவரத்தின் 41ஆவது வருட நினைவேந்தல் கொழும்பு மற்றும் தமிழ் பேசும் மக்களின் தாயகமான வடக்கு, கிழக்கில் நேற்று செவ்வாய்க்கிழமை அனுஷ்டிக்கப்பட்டது.

கொழும்பில் பொரளை கனத்தை பொது மயானத்துக்கு முன்பாகவுள்ள சுற்று வட்டத்தில் "மீண்டுமொரு கறுப்பு

11



## தமிழ் பொது வேட்பாளர் விடயத்தில் தலையிட்டு கொச்சைப்படுத்தாதீர்!

### மலையக தலைவர்களை கேட்கிறது இ. தொ. கா.

கொழும்பு, ஜூலை 24

"ஜனாதிபதித் தேர்தலில் வடக்கு, கிழக்கு தலைமைகள் ஒன்று சேர்ந்து பொது வேட்பாளர் ஒருவரை களமிறக்கத் தீர்மானித்திருக்கின்றன. இந்த விடயத்தில் மலையக தமிழ் கட்சிகளின் தலைமைகள் மூக்கை நுழைத்து அவர்களின் நோக்கத்தை கொச்சைப் படுத்தும் வகையில் கருத்துத் தெரிவிக்க கூடாது" - இவ்வாறு இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில், அந்தக் கட்சியின் பிரதித் தலைவர் கணபதி கனகராஜ் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டவை வருமாறு,

" மலையக தலைமைகள் வடக்கு,கிழக்கு மக்களின் உரிமை போராட்டத்துக்கு எப்போதும் எதிராக செயல் படக்கூடாது. வடக்கு, கிழக்கு மக்களின்

11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இப்படியும் நடக்கிறது

"தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை மீள உருவாக்கவும் - மீளுருவாக்கப்படும் கூட்டமைப்பு தேர்தலுக்கானது என்பதை கடந்து தேசத்துக்கானதாகக் கட்டியெழுப்பப்பட வேண்டும். இதற்கு தமிழ்த் தேசிய தலைவர்கள் ஒவ்வொருவரும் ஒத்துழைக்க வேண்டும்" - இவ்வாறு தமிழ்த் தேசிய கட்சிகளுக்கு அழைப்பு விடுத்துள்ளார் இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சி. சிறீதரன்.

மேற்காணும் செய்தியே நேற்று முன்தினம் ஈழநாடுவின் தலைப்புச் செய்தி.

இதன்மூலம் தமிழ் அரசின் புதிய தலைவராக தெரிவு செய்யப்பட்டபோதிலும் அந்தக் கதிரையில் அமர முடியாமல் இருக்கும் நமது சிறீதரன் சொல்ல வருவது என்ன?

இதுவரை நாம் அறிந்து வைத்திருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தேர்தலுக்கானது என்பதுதான். ஆனால், அதையும்விட முக்கியமான ஒன்றை அவர் இலகுவாக மறந்துவிடுகின்றார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஏன் இன்று காணாமல் போனது? தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவாக்கப்பட்ட பின்னர் சந்தித்த முதலாவது தேர்தலில் இருபத்தி இரண்டு பாராளுமன்ற உறுப்பினர்களை கொண்டிருந்த அந்த மாபெரும் அமைப்பு இன்று பத்தாகி சுருங்கியது ஏன்?

அதனை சிறீதரன் இரைமீட்டுப்பார்த்தால், கிடைக்கும் பதில் அந்த அமைப்பை வழிநடத்திய சம்பந்தன் ஐயா கூடஇருந்தவர்களின் கருத்துகளை கேட்காமல், தானும் தனது சகாவும் மாத்திரமே முடிவெடுத்து கட்சியை வழிநடத்தியதுதான் என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டியிருக்கும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை நிறுவன மயப்படுத்த வேண்டும் என்றும் அதாவது, அதனை பதிவுசெய்த ஓர் அமைப்பாக மாற்றவேண்டும் எனவும் அதற்கான கட்டமைப்புகளை அமைக்க வேண்டும் என்றும் பலரும் கோரிக்கை வைத்தபோதெல்லாம் அதனை சம்பந்தனும் சகாக்களும் உதாசீனம் செய்ததும் - தன்னிச்சையாக நடந்துகொண்டதும்தான் இன்று கூட்டமைப்பே காணாமல் போனதற்கு முக்கிய காரணம்.

கூட்டமைப்பு இயங்கிய காலங்களில் எந்த ஒரு முடிவை எடுப்பதானாலும்- உதாரணமாக நாட்டின் வரவு - செலவுத் திட்டமாக இருக்கட்டும் அல்லது ஓர் அரசாங்கத்தின்மீதான நம்பிக்கையில்லாத் தீர்மானமாக இருக்கட்டும் எல்லாவற்றுக்குமே முதல் நாள் இரவில் சம்பந்தன் மாத்திரமே முடிவெடுப்பதாகவும் அதனையே மற்றவர்கள் கேள்விக்கு உட்படுத்தாமல் நிறைவேற்றுவதாகவுமே இருந்து வந்தது.

ஒரு தடவை, ஒரு முஸ்லிம் கட்சி ஒன்றின் தலைவர் சொன்னது இப்போது ஞாபகத்துக்கு வருகின்றது.

நல்லாட்சி அரசாங்கத்தில் பிரதமராக இருந்த ரணில் விக்கிரமசிங்க அரசுமீதான நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மீதான வாக்கெடுப்புக்கு முன்னர், ஒவ்வொரு கட்சிகளாக சந்தித்து "டீல்" போட்டுக் கொண்டிருந்த காலம். அந்த முஸ்லிம் தலைவரிடம் சொன்னாராம், "உங்களோடு பேசுவதெனில், உங்கள் கட்சியிலுள்ள அத்தனை எம். பிக்களுடனும் தனித்தனியாக பேசவேண்டும். இல்லையெனில், அவர்கள் எந்தப் பக்கம் போவார்கள் என்று சொல்ல முடியாது. உங்கள் ஐந்து பேருடனும் பேசவேண்டியிருக்கின்றது. ஆனால், அவர்களை பாருங்கள் - பதினைந்து பேர் இருந்தும் ஒருவருடனேயே பேசி முடிவெடுத்துவிடலாம்" என்று.

அவர் சொன்னது நமது கூட்டமைப்பினரைத்தான்.

இதனால்தான் கட்சி நாளொரு வண்ணமும் ஒவ்வொரு பிரச்னைகளை எதிர்கொண்டது. சர்வதேச விவகாரங்களை ஐ. நா. மனித உரிமைகள் விவகாரங்களை எல்லாவற்றையும் ஒருவரே தன்னிச்சையாக முடிவெடுத்து காய்களை நகர்த்திக் கொண்டிருந்தார்.

அப்போது அவர்கள் யாருடனும் கலந்துபேசி எந்த முடிவையும் எடுக்கவில்லை. அதிகம் ஏன், இந்திய பிரதமர் மோடி அழைத்தபோது அதனை நிராகரிப்பதற்குக்கூட கட்சியிலுள்ள மற்றவர்களுடன் கலந்துபேசி முடிவெடுக்கவில்லை.

அதனால்தான், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு காணாமல் போனது. இப்போது தேர்தலுக்கானதாக அல்லாமல் தேசத்துக்கான கூட்டு தேவை என்கிறார் சிறீதரன்.

தமிழ் பொதுவேட்பாளரை ஜனாதிபதித் தேர்தலில் நிறுத்துவதற்காக வடக்கு, கிழக்கிலுள்ள சிவில் சமூக பிரதிநிதிகள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் இணைந்து உருவாக்கிய தமிழ் மக்கள் பொதுச்சபை இப்போது, ஏழு அரசியல் கட்சிகளுடன் இணைந்து தமிழ்த் தேசிய பொதுக்கட்டமைப்பு ஒன்றை உருவாக்கியிருக்கின்றது.

இனி அந்த பொதுக்கட்டமைப்பு எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலுடன் நின்றுவிடாமல் தொடர்ந்து தேசத்தை கட்டியெழுப்பும் பணியை செய்யப்போவதாகவும் அறிவித்திருக்கின்றது. ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளரை நிறுத்துவதற்காகக் கூட நிதி விடயங்களைக் கையாள ஒரு குழு, வேட்பாளர் தெரிவு, பிரசாரம் என்று ஒவ்வொன்றுக்கும் தனித்தனிக் குழுக்கள் அமைக்கப்படும் என்றும் அறிவிக்கப்படிருக்கின்றது.

சிறீதரன் சொல்வதுபோல தேசத்தை கட்டியெழுப்புவதற்கான கட்டமைப்பாகவே அது இயங்கவிருக்கின்றது. ஏற்கனவே, தமிழ்த் தேசிய அரசியல் பரப்பில் இயங்கும் ஏழு கட்சிகளும் இணைந்துவிட்டன. தமிழ் அரசு கட்சியும் தமிழ் காங்கிரஸ் கட்சியும்தான் இணையவில்லை. காங்கிரஸ் இணையப்போவதில்லை. எனவே, தமிழ் அரசும் அந்தக் கட்டமைப்பில் இணைந்துவிட்டால் சிறீதரன் நினைக்கின்ற கூட்டமைப்பு தயாராகிவிடுமே.!

**- ஊர்க்குருவி.**

## காணாமலாக்கப்பட்ட உறவுகளின் யாழ். சங்கத்துக்கு புதிய நிர்வாகம்!

யாழ்ப்பாணம், ஜூலை 24

வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவினர்களின் யாழ்ப்பாணம் மாவட்ட சங்கத்துக்கு புதிய நிர்வாகம் நேற்று செவ்வாய்க்கிழமை தெரிவு செய்யப்பட்டது.



யாழ்ப்பாணம் பிரதான வீதியிலுள்ள கலைத்தூது மண்டபத்தில் நடைபெற்ற நிர்வாக தெரிவில் தலைவராக சிவபாதம் இளங்கோதை, செயலாளராக நி. மேரி ரஞ்சினி, உப தலைவராக சு. கஜேந்திரன், உப செயலாளராக புஸ்பலதா, பொருளாளராக விஜயபாமா ஆகியோர் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டனர். இதனைத் தொடர்ந்து ஏனைய நிர்வாக உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

"வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோருக்கு நீதி கோரி தொடரும் பயணத்தைத் தொடர்ந்தும் முன்னெடுத்து செல்வேன். எம்மீது சர்வதேச நாடுகள் கரிசனை கொண்டு எமக்கான நீதியை பெற்றுத் தரவேண்டும்", புதிய தலைவராக தெரிவான இளங்கோதை தனது உரையில் தெரிவித்தார். (ஐ)

## புலிகளின் தங்கத்தை தேடிய சிப்பாய் உட்பட மூவர் கைது!

மன்னார், ஜூலை 24

விடுதலைப் புலிகள் புதைத்து வைத்தனர் என்று கூறப்படும் ஆயுதங்கள் - தங்கத்தைத் தேடிய சிப்பாய் உட்பட மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

விசேட அதிரடிப் படையின் யாழ். பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ரோய் சுமணவர்த்தன தலைமையில் மன்னார் முகாம் கட்டளைத் தளபதி பொலிஸ் பரிசோதகரின் பரிந்துரைக்கமைய மன்னார் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தல்பாடு வீதி, தாராபுரம் பகுதிகளில் விசேட அதிரடிப்படையினர் நடத்திய தேடுதலில் இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

குருநாகலை சேர்ந்த 49 வயதான சிப்பாய், வவுனியாவை சேர்ந்த 29 வயது நபர், அநுராதபுரத்தை சேர்ந்த 62 வயது நபர் ஆகியோரே இவ்வாறு கைது செய்யப்பட்டனர்.

கைதானவர்களிடம் மடிக்கணினி, ஸ்கானர் இயந்திரம் என்பன கைப்பற்றப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

## திருத்திய நிகழ்நிலை காப்பு சட்டத்தை பாராளுமன்றில் சமர்ப்பிக்க அனுமதி!

கொழும்பு, ஜூலை 24

திருத்தப்பட்ட நிகழ்நிலை காப்பு சட்ட மூலத்தை வர்த்தமானியில் வெளியிட்டு பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க அமைச்சரவை அனுமதியளித்துள்ளது.

நிகழ்நிலை காப்பு சட்ட மூலம் தொடர்பாக உயர்நீதிமன்றம் வழங்கிய ஆலோசனைக்கு அமைய திருத்தங்கள் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட பின்னர், 2024 ஆம் ஆண்டின் 09ஆம் இலக்க நிகழ்நிலைக் காப்பு சட்டம் தற்போது நடை முறையில் உள்ளது.

ஆனால், குழுநிலை விவாதத்தின்போது அவ்வாறான திருத்தங்களை சட்டமூலத்தில் உட்சேர்த்து கொள்வதற்கு இயலுமை கிட்டவில்லை. இதற்கமைய, குறித்த திருத்தங்களை உள்ளடக்கி 2024ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க நிகழ்நிலை காப்பு சட்டத்தைத் திருத்தம் செய்வதற்கு சட்டமூலமொன்றைத் தயாரிப்பதற்காக 2024.02.12 அன்று நடந்த அமைச்சரவை கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

அதற்கு இணங்க, சட்ட வரைஞரால் தயாரிக்கப்பட்டுள்ள சட்டமூலத்துக்கு சட்டமா அதிபரின் ஒப்புதல் கிடைக்கப்பெற்றுள்ளது. குறித்த சட்டமூலத்தை அரச வர்த்தமானியில் வெளியிடுவதற்கும் பின்னர் பாராளுமன்ற அங்கீகாரத்துக்காக சமர்ப்பிப்பதற்கும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (ஐ)

## கொலைக்கு பயன்படுத்தப்பட்ட துப்பாக்கி பொலிஸாரால் மீட்பு!

கொழும்பு, ஜூலை 24

கொலை சம்பவம் ஒன்றுக்கு பயன்படுத்தப்பட்டதாகக் கூறப்படும் துப்பாக்கியை நுகேகொடையில் மீட்கபட்டதாகக் குற்றப் புலனாய்வு திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் தெரியவருவதாவது,

2019ஆம் ஆண்டில் நபர் ஒருவரை சுட்டுக் கொன்றுவிட்டு டுபாய்க்கு தப்பிச் சென்ற சந்தேக நபரொருவர் கடந்த 12ஆம் திகதி குற்றப் புலனாய்வு திணைக்கள அதிகாரிகளால் கைது செய்யப்பட்டு நாட்டுக்கு அழைத்து வரப்பட்டார். நுகேகொடையை சேர்ந்த 48 வயதான வர்த்தகரே இவ்வாறு அழைத்து வரப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார். இதன்போது, அவரை 90 நாட்கள் தடுப்பு காவலில் வைத்து விசாரிக்க நீதிமன் றம் உத்தரவிட்டது.

சந்தேக நபரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் நுகேகொடையில் உள்ள காணியொன்றில் மிகவும் சூட்சுமமான முறையில் புதைக்கப்பட்டிருந்த துப்பாக்கி மீட்கப்பட்டது. மீட்கப்பட்ட துப்பாக்கி கொலை ஒன்றுக்கு பயன்படுத்தப்பட்டது என்று குற்றப்புலனாய்வு பிரிவினர் தெரிவித்தனர். (ஐ)

## தமிழ் அரசியல் கைதிகளை சந்தித்தார் கஜேந்திரன் எம். பி.

கொழும்பு, ஜூலை 24

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன் வெலிக்கடை சிறைச்சாலைக்கு நேற்று சென்று தமிழ் அரசியல் கைதிகளை பார்வையிட்டார்.

இது தொடர்பில் அவரின் சமூக வலைதளப் பதிவில், வெலிக்கடை சிறைப் படுகொலையின் 41 வருடங்கள் நினைவை முன்னிட்டு மகசின் சிறைச்சாலைக்கு சென்று தமிழ் அரசியல் கைதிகளை சந்தித்தோம். அவர்கள் 15 - 29 வருடங்களாக சிறையில் அணுவணுவாகச் செத்துக் கொண்டிருக்கிறார்கள். 11 தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலைக்காக தமிழ் மக்கள் தீவிரமாகக் குரல் கொடுக்க வேண்டும் - என்று குறிப்பிட்டுள்ளார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
24.07.2024 புதன்கிழமை
குரோதி வருடம், ஆடி 08

“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## மீண்டும் கூட்டமைப்பு

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை மீளுருவாக்குவதற்கு ஒத்துழைப்பு வழங்குங்கள் - இது தொடர்பில் அனைத்துத் தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர்களுக்கும் அழைப்பு விடுப்பதாக இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்திருக்கின்றார். சி. வி. விக்னேஸ்வரனின் கட்சி மகாநாட்டில் பங்குகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்திருக்கின்றார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக இரண்டு தசாப்தங்களாக ஒன்றுபட்டு செயல்பட்ட கட்சிகள் அனைத்தும் சிதறிக்கிடக்கும் நிலையில்தான் சிறீதரன் இவ்வாறானதொரு கருத்தைத் தெரிவித்திருக்கின்றார். ஆனால், இலங்கை தமிழ் அரசு கட்சியின் அணுகுமுறைகளால்தான் தமிழ்த் தேசியக் கட்சிகள் அதிகம் சிதற வேண்டிய நிலைமை ஏற்பட்டது. நடைபெறாத உள்ளூராட்சி தேர்தலை காரணம் காண்பித்தே இலங்கை தமிழ் அரசுக் கட்சியானது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை சிதைத்தது. இதன் விளைவாகவே புதியதொரு கூட்டணி உருவாகியது.

ஒப்பீட்டு அடிப்படையில் ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியே தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கான மாற்று கூட்டணியாகக் காட்சியளிக்கின்றது. இந்தப் பின்புலத்தில் நோக்கினால், இலங்கை தமிழ் அரசுக் கட்சி ஐந்து கட்சிகளின் கூட்டணியுடன் இணைவதன் ஊடாக மீளவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு சுவாசமளிக்க முடியும். ஆனால், அதனை செய்யக்கூடிய ஆற்றலுடன் தமிழ் அரசுக் கட்சி இருக்கின்றதா என்பதுதான் கேள்வி.

ஒப்பீட்டு அடிப்படையில் வடக்கு - கிழக்கில் பலமான நிலையிலிருந்த ஒரேயொரு கட்சியான தமிழ் அரசுக் கட்சி தற்போது உள்முரண்பாடுகளுக்குள் சிக்குண்டு தடுமாறிக் கொண்டிருக்கின்றது. ஒன்றுபட்டு கூட்டுத் தீர்மானங்களை மேற்கொள்ளக்கூடிய நிலையிலும் கட்சி இல்லை. இவ்வாறானதொரு நிலையில் ஏனைய கட்சிகளுக்கு அழைப்பு விடுப்பதற்கு முன்னர், தமிழ் அரசுக் கட்சி ஒரு கட்சியாக தன்னை நிரூபிக்க வேண்டியிருக்கின்றது. தற்போதுள்ள நிலையில், தமிழ் பொது வேட்பாளர் நிலைப்பாட்டை உத்தியோகபூர்வமாக ஆதரித்து கட்சிகளும் தமிழ் மக்கள் பொதுச் சபையும் இணைந்திருக்கும் கட்டமைப்புடன் இணைவதன் ஊடாக தமிழ் அரசுக் கட்சி ஏனையவர்களுடன் இணைந்து பயணிக்கும் முயற்சியை முன்னெடுக்கலாம். ஆனால், பிரச்னை அவ்வாறானதொரு நிலையில் கட்சி இல்லை.

சிறீதரனின் அழைப்பு கட்சியின் அழைப்பாக நோக்கப்படப் போவதில்லை. ஏனெனில், சுமந்திரன் அதற்கு எதிரான நிலைப்பாட்டை வெளிப்படுத்தலாம். தமிழ் பொது வேட்பாளர் விடயத்தில் தமிழ் அரசுக் கட்சி உத்தியோகபூர்வமான நிலைப்பாட்டை எடுக்காதபோதிலும்கூட சுமந்திரன் அதனை எதிர்த்து பொதுக் கூட்டமொன்றை நடத்தியிருந்தார். ஆனால், சிறீதரனோ தமிழ் பொது வேட்பாளர் நிலைப்பாட்டை ஆதரித்து வருகின்றார். தமிழ் அரசுக் கட்சியின் இன்றைய தளம்பல் நிலைக்கு இது ஒன்றே சிறந்த எடுத்துக்காட்டு.

சிறீதரனின் நிலைப்பாடு சரியானது. அவர் அரசியல் யதார்த்தத்தை நன்கு புரிந்திருக்கின்றார். தற்போதுள்ள நிலையில் இலங்கை தமிழ் அரசு கட்சி தனித்துப் போட்டியிட்டால் மோசமான பின்னடைவை சந்திக்கும். குறிப்பாக, கிழக்கு மாகாணத்தில் இரண்டு மாவட்டங்கள் அரசியல் பிரதிநிதித்துவத்தை இழந்து போகும் ஆபத்து உண்டு. மட்டக்களப்பில் ஓர் ஆசனத்தை மட்டுமே தக்கவைக்கக்கூடிய சூழல் காணப்படுகின்றது. இவ்வாறானதொரு சூழலில், ஒன்றுபட்டு செயல்படுவதன் ஊடாக மட்டுமே ஒப்பீட்டு அடிப்படையில் அதிக ஆசனங்களைத் தக்கவைக்க முடியும். தமிழ் மக்களின் அரசியல் பிரதிநிதித்துவம் ஓரிடத்தில் இருக்க வேண்டியது கட்டாயமானது. ஏற்கனவே, பலவீனமான நிலையிலிருக்கும் தமிழர் அரசியல் பிரதிநிதித்துவம் மேலும் சிதறுவதன் மூலம் ஆகக்குறைந்த பேரம்பேசலுக்கான தகுதியைக்கூட இல்லாமலாக்கும். இதனை சிறீதரன் உணர்ந்திருக்கலாம் அதனால், அவர் கூட்டமைப்பின் மீளுருவாக்கம் தொடர்பில் கரிசனை கொள்ளலாம். ஆனால், பிரச்னையோ - அதனை எவ்வாறு செய்வது? எந்த அடிப்படையில் செய்வது? என்பதே.

# காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் யாழில் போராட்டம்!

யாழ்ப்பாணம், ஜூலை 24

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் யாழ்ப்பாணத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை கவனவீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

யாழ்ப்பாணம் பிரதான வீதியில் கலைத்தூது மண்டபத்துக்கு அருகே இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.



வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு நீதி கோரி முன்னெடுக்கப்படும் போராட்டங்கள் வடக்கு, கிழக்கில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் எதிர் வரும் நாட்களில் சுழற்சி முறையில் முன்னெடுக்கப்படும் என்று இதன்போது போராட்டக்காரர்கள் தெரிவித்தனர். (ஐ)

# ஊடகவியலாளர்கள் மீதான அச்சுறுத்தலை ஏற்கமுடியாது

அமைச்சர் பந்துல குணவர்த்தன

கொழும்பு, ஜூலை 24

எந்த அரசியல் கட்சியை சேர்ந்தவர்களாக இருந்தாலும் - அவர்கள் யாராக இருந்தாலும் ஊடகவியலாளர்களுக்கு அச்சுறுத்தல் விடுப்பதை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது. இந்த செயலை வன்மையாகக் கண்டிக்கிறேன் என்று போக்குவரத்து மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

“இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்தின் தலைவர் ஹட்சன் சமரசிங்கவுக்கு எதிராக விடுத்த கொலை அச்சுறுத்தல் காரணமாக அவரின் உயிர் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. எந்த அரசியல் கட்சியை சேர்ந்தவர்களாக இருந்தாலும் எந்தக் கருத்தை தெரிவித்து வந்தாலும் அது தொடர்பில் தாங்கிக் கொள்ள வேண்டிய சக்தி அரசியல்வாதிகளுக்கு உள்ளது. எனினும், ஜே. வி. பியிடம் அது இல்லை.

“எதிர்காலத்தில் வன்முறைகள் இன்றி அமைதியான முறையில் தேர்தலை நடத்தத் தயாராகவுள்ளோம். அதற்காக அனைவரும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும். இவ்வாறு, ஊடகவியலாளர்கள் யாரேனும் அச்சுறுத்தப்பட்டால் அவர்கள் குற்றப் புலனாய்வு திணைக்களத்தில் முறைப்பாடு செய்து அவர்களுக்கு தேவையான பாதுகாப்பை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்”, என்றும் அமைச்சர் கூறினார்.

இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்தின் தலைவர் ஹட்சன் சமரசிங்கவுக்கு ஜே. வி. பியின் மத்திய குழு உறுப்பினர் வசந்த சமரசிங்க கொலை மிரட்டல் விடுத்தார் என்று சிங்கள வார இதழ் ஒன்று செய்தி வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# பௌராணிகர் விவரம் கோரல்


வடமராட்சி, ஜூலை 24

வடமராட்சியில் அடுத்த மாதம் கந்தபுராணம் விழா நடைபெறவுள்ளது. புலோலி கந்தபுராண கழகத்தால் நடத்தப்படும் இந்த விழாவில் “கந்தபுராண கலாசாரம்”, “புராணம் படிக்கும் ஆலயங்களும் பௌராணிகர்களும் வடமராட்சி மண்ணின் பதிவு” என இரு நூல்கள் வெளியிடப்படவுள்ளன. இந்த விழாவில் வெளியிடப்படவுள்ள நூலுக்கு பௌராணிகர்களின் விவரம் கோரப்பட்டுள்ளது.

எனவே, பௌராணிகர்கள் தங்கள் பற்றிய கட்டுரையை புகைப்படம் ஒன்றுடன் தந்துதவுமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். சமர்ப்பிக்கப்படும் கட்டுரையில், பிறந்த ஆண்டு, குடும்ப விவரம், கல்வி தகைமை, படிக்கும் புராணம் - ஆலயங்கள் பற்றிய விவரம், படிக்கத் தொடங்கிய காலம், நூல்கள் எழுதியிருந்தால் அது பற்றிய விவரம், புராண படிப்பின் ஆசிரியர் விவரம் என்பன குறிப்பிடப்பட வேண்டும். புலம்பெயர்ந்து வாழும் பௌராணிகர்களும் விவரங்களை அனுப்ப முடியும். மேலதிக விவரங்களுக்கு 077 439 3118 என்ற கைபேசி இலக்கத்துக்கு தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

வடமராட்சியில் கந்தபுராண விழா ஓகஸ்ட் 17, 18, 19ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ-02)

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்றைய ராசிபலன்

ஜூலை - 24 புதன்கிழமை
குரோதி வருடம் - ஆடி 08
நல்ல நேரம் : 09.00 - 10.30
ராகு காலம் : 12.00 - 01.30
திதி : சதுர்த்தி

**மேடம்**
எதையும் சமாளிக்கும் சாமர்த்தியம் உங்களுக்கு உண்டு. வியாபாரத்தில் வேலையாட்கள் கடமையுணர்வுடன் செயல்படுவார்கள். உங்களின் புதிய முயற்சிகளை அதிகாரி பாராட்டுவார்.

**இடபம்**
கோபத்தை கட்டுப்படுத்தி உயர்வதற்கான வழியை யோசிப்பீர்கள். வியாபாரத்தில் சில சூட்சுமங்களைப் புரிந்து கொள்வீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் மதிப்பார்கள். மதிப்பு உயரும்.

**மிதுனம்**
கடந்த 2 நாட்களாக கணவன்- மனைவிக்குள் இருந்த மோதல்கள் விலகும். வியாபாரத்தில் போட்டிகள் குறையும். உத்தியோகத்தில் மேலதிகாரி உதவுவார். புது அத்தியாயம் தொடங்கும் நாள்.

**கடகம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் செலவுகளை குறைக்க முடியாமல் திணறுவீர்கள். வியாபாரத்தில் ஒப்பந்தங்கள் தள்ளிப்போகும். அதிகாரிகளுடன் அளவாக பழகுங்கள். எச்சரிக்கையுடன் செயல்பட வேண்டும்.

**சிம்மம்**
சவாலான வேலைகளையும் சாதாரணமாக முடிப்பீர்கள். பிள்ளைகள் பொறுப்பாக செயல்படுவார்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் உங்கள் வேலைகளை பகிர்ந்து கொள்வார்கள்.

**கன்னி**
பணப்புழக்கம் அதிகரிக்கும். உறவினர் நண்பர்களின் வருகையால் வீடு களைகட்டும். அரசால் அனுகூலம் உண்டு. உத்தியோகத்தில் உங்கள் கருத்துக்கு ஆதரவு பெருகும். திடீர் யோகம் கிட்டும்.

**துலாம்**
குடும்ப வருமானத்தை உயர்த்த முற்படுவீர்கள். வியாபாரத்தில் புது வேலையாட்கள் அமைவார்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் ஆதரிப்பார்கள். கனவு நனவாகும் நாள்.

**விருட்சிகம்**
பிரியமானவர்களின் சந்திப்பு அடிக்கடி நிகழும். பணப்பற்றாக்குறையை சாமர்த்தியமாக சமாளிப்பீர்கள். வியாபாரத்தில் பங்குதாரர்களின் பிரச்னை தீரும். மறுக்கப்பட்ட உரிமைகள் கிடைக்கும்.

**தனுசு**
சவால்கள் விவாதங்களில் வெற்றி பெறுவீர்கள். வியாபாரத்தில் அனுபவமிக்க வேலையாட்களை தேடுவீர்கள். உத்தியோகத்தில் பெரிய பொறுப்புகள் தேடி வரும். தைரியம் கூடும் நாள்.

**மகரம்**
கடந்த 2 நாட்களாக இருந்த சோர்வு நீங்கி துடிப்புடன் செயல்படத் தொடங்குவீர்கள். வியாபாரத்தில் புது ஒப்பந்தம் கையெழுத்தாகும். உத்தியோகத்தில் மேலதிகாரி ஒத்துழைப்பார்கள்.

**கும்பம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் ஒரே நேரத்தில் இரண்டு. வியாபாரத்தில் ரகசியங்களை வெளியிட வேண்டாம். எதிர்பார்த்த சலுகைகள் தாமதமாக கிடைக்கும். பொறுப்புணர்ந்து செயல்பட வேண்டும்.

**மீனம்**
விடாப்பிடியாக செயல்பட்டு சில வேலைகளை முடிப்பீர்கள். உத்தியோகத்தில் மேலதிகாரிகளிடம் விவாதம் வேண்டாம். சக ஊழியர்கள் உங்களுக்கு உதவுவார்கள். தடைகளை தாண்டி முன்னேறுவீர்.

# ஆம்ஸ்ட்ராங் கொலை வழக்கில் தே.மு.தி.கவுக்கு தொடர்பில்லை

## பிரேமலதா கடும் கண்டனம்

சென்னை, ஜூலை 24

பகுஜன் சமாஜ் கட்சியின் தமிழக மாநில தலைவர் ஆம்ஸ்ட்ராங் கொலை வழக்கில் தே. மு. தி. கவுக்கு தொடர்பில்லை என்று அந்தக் கட்சியின் பொதுச் செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் வெளியிட்ட அறிக்கையில், ஆம்ஸ்ட்ராங் கொலை வழக்கில் அனைத்து கட்சியினரையும் விசாரணை வளையத்துக்குள் கொண்டுவர வேண்டும் என்ற நோக்கத்தோடு பொலிஸார் செயல்படுகின்றனர் என்ற தகவல்கள் வருகின்றன.

தே. மு. தி. கவை சேர்ந்த திருவள்ளூர் நகர செயலாளர் மணிகண்டனுக்கும் இந்த வழக்கில் தொடர்பு இருப்பதாக கூறப்படுவது முற்றிலும் தவறான செய்தி. விசாரணை என்ற பெயரில் அவரை அழைத்துப் பேசியுள்ளனர். விசாரணையில் எதுவும் நிரூபிக்கப்படாததால் அவரை வழக்கில் உட்படுத்தாமல் அனுப்பிவிட்டனர்.

அதற்குள் இந்த விவகாரத்தில் தே. மு. தி. கவுக்கும் தொடர்பு உள்ளது என உண்மைக்குப் புறம்பான தகவல்களை ஊடகங்கள் வெளியிடுவது கண்டிக்கத்தக்கது. இது போன்ற செய்திகளை தீர விசாரித்து வெளியிட வேண்டும் என்று அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளார். (எ)

# "அ. தி. மு. க. ஆட்சியின் திட்டங்களை தி. மு. க. சிறப்பாக செயல்படுத்துகிறது"

சென்னை, ஜூலை 24

அ. தி. மு. க. ஆட்சியின் திட்டங்களை தி. மு. க. மேலும் சிறப்பாக செயல்படுத்துகிறது. பேதம் பார்க்கும் பண்பு எங்களிடம் இல்லை என்று தி. மு. க. விளக்கமளித்துள்ளது.

இது தொடர்பில் அந்தக் கட்சி வெளியிட்டுள்ள அறிக்கையில், அ. தி. மு. க. ஆட்சி காலத்தில் நடைமுறைப்படுத்தப்பட்ட திட்டங்களை தி. மு. க. அரசு நிறுத்திவிட்டதாகவும், திட்டத்தை மூடிவிட்டதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் பழனிச்சாமி குறை கூறியுள்ளார். தி. மு. க. ஆட்சிக்கு வந்தால் அம்மா உணவகங்களை மூடிவிடுவார்கள் என்று அவர் தெரிவித்திருந்தார். ஆனால், அம்மா உணவகங்கள் தொடர்ந்து செயல்படுகின்றன. கடந்த 3 ஆண்டு தி. மு. க. ஆட்சியில் அம்மா உணவகங்களுக்கு 250 கோடி ரூபாய் நிதிஒதுக்கி, சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது என்று அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)


# தமிழகத்துக்கு கர்நாடகாவில் இருந்து வினாடிக்கு 60,290 கன அடி நீர் திறப்பு

சென்னை, ஜூலை 24

கர்நாடக அணைகளில் இருந்து தமிழகத்துக்கு காவிரியிலிருந்து வினாடிக்கு 60 ஆயிரத்து 290 கன அடி நீர் திறக்கப்பட்டுள்ளது.

கர்நாடகா, கேரளா மாநிலங்களில் தென்மேற்கு பருவமழை தீவிரமடைந்ததன் காரணமாக காவிரி நீர்பிடிப்பு பகுதிகளான குடகு, வயநாடு உள்ளிட்ட பகுதிகளில் கனமழை பெய்து வருகிறது.

இந்த நிலையில் கர்நாடக அணைகளில் இருந்தும் வினாடிக்கு 60 ஆயிரத்து 290 கன அடி தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது. இந்த தண்ணீர்,



டி. நரசிப்புராவில் உள்ள திருமாகூடலுவில் சங்கமித்து அகண்ட காவிரியாக தமிழகம் நோக்கி வருகிறது. (எ)

# 10 ஆண்டுகளாக செய்ததையே பா. ஜ. க. இம்முறையும் செய்யும்

## பட்ஜெட் குறித்து தி. மு. க. விமர்சனம்

சென்னை, ஜூலை 24

கடந்த 10 ஆண்டுகளாக செய்ததையே பா. ஜ. க. இம்முறையும் செய்யும். மோடி அரசின் பட்ஜெட் தேசத்தில் உள்ள சில பணம் படைத்த செல்வந்தர்களுக்கானதாக உள்ளது என்று தி. மு. கவின் கொள்கை பரப்பு செயலாளர் டி. கே. எஸ். இளங்கோவன் விமர்சித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை வரவு - செலவு திட்டத்தை மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் சமர்ப்பித்தார். இது தொடர்பில் சென்னையில் பத்திரிகை செய்தியாளர் சந்திப்பில் இளங்கோவன் மேலும் தெரிவிக்கையில்,

"கடந்த பத்து ஆண்டுகளாக மத்திய அரசு என்ன செய்ததோ அதை அப்படியே இந்த முறையும் தொடரும். நிர்மலா சீதாராமன் ஏழாவது முறையாக பட்ஜெட் தாக்கல் செய்துள்ளார். ஆனால், இதற்கு முன்னர் அவர் தாக்கல் செய்த ஆறு பட்ஜெட்டில் அவர் வழங்கிய வாக்குறுதிகளில் பெரும்பாலானவை இது வரை நிறைவேறாமல் உள்ளது.

பா. ஜ. கவின் பட்ஜெட் தேசத்தில் உள்ள சில பணம் படைத்த செல்வந்தர்களுக்கானதாக உள்ளது. அது ஏழை மக்களுக்கானதாக ஒருபோதும் இருந்தது இல்லை. அதனால் வறுமை கோட்டுக்கு கீழுள்ள குடும்பங்களைச் சேர்ந்த மக்கள் மற்றும் குறைந்த வருமானம் ஈட்டும் நடுத்தர மக்களின் வாங்கும் திறன் குறைந்துள்ளது.

ஆனால், பணம் படைத்தவர்களுக்கு பல ஆயிரம் கோடி ரூபாய் கடன் தொகையை மோடி அரசு தள்ளுபடி செய்துள்ளது. தொழிலில் தோல்வியடைந்த செல்வந்தர்களை ஆதரிக்கும் வகையில் மத்திய அரசு செயல்படுகிறது. அதற்காகத் தான் இந்த பட்ஜெட்"- என்றார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளாதார இடருக்கு மத்தியிலும் 16,000 பேருக்கு ஆசிரியர் நியமனம்!

## கல்வி அமைச்சர் சுசில் பெருமிதம்

கொழும்பு, ஜூலை 24

**நாட்டிலுள்ள பொருளாதார சிக்கல்களுக்கு மத்தியிலும் 16 ஆயிரம் ஆசிரியர்களை நியமித்து ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்துள்ளதாக கல்வி அமைச்சர் சுசில் பிரேம்ஜயந்த தெரிவித்தார்.**



ஜனாதிபதி ஊடக மையத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே கல்வி அமைச்சர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கொவிட் தொற்று மற்றும் நாட்டில் ஏற்பட்ட போராட்டத்துடன், இந்த நாட்டில் உள்ள ஏனைய எல்லாத் துறைகளைப் போலவே,

கல்வித் துறையும் பாரிய நெருக்கடியை சந்தித்தது.

வீழ்ந்த நாட்டை மீட்கும் பொறுப்பை வேறு யாரும் பொறுப்பேற்காத நிலையில், ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான எமது அரசாங்கம் அந்த பொறுப்பை ஏற்றுக்கொண்டது.

அப்போது காணப்பட்ட நிலைமையை மாற்றி இரண்டு வருடங்களுக்குள் நாட்டை இயல்பு நிலைக்கு கொண்டுவர அரசாங்கம் செயற்பட்டது. எனவே, இந்த நேரத்தில், நாட்டின் அன்றைய நிலையையும், இன்றைய நிலையையும் நினைவு கூர வேண்டிய தேவை உள்ளது.

நாட்டில் உள்ள பாடசாலை மாணவர்களுக்கு 2025ஆம் ஆண்டுக்கான பாடசாலைச் சீருடைகளை 100 வீதம் வழங்குவதாக சீன அரசாங்கம் அமைச்சுக்கு உறுதிப்படுத்தியுள்ளது.

2025 ஆம் ஆண்டுக்கான பாடசாலை பாடப் புத்தகங்களை பிரதேச களஞ்சியங்களுக்கு விநியோகிக்கும் பணிகள் நாளை முதல் ஆரம்பிக்கப்படும். பிரதான மற்றும் தேசிய பாடசாலைகள் தவிர்ந்த ஏனைய அனைத்து பாடசாலைகளுக்கும் மதிய உணவு வழங்க ஏற்பாடு செய்துள்ளோம்.

இதன் மூலம் 17 இலட்சம் மாணவர்கள் பயன்பெறுகின்றனர். பல்கலைக்கழகங்களில் வெளிநாட்டு உதவியின் கீழ் ஆரம்பிக்கப்பட்டு கடந்த காலத்தில் நிறுத்தப்பட்ட அபிவிருத்தி பணிகளும் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இது பல்கலைக்கழக கட்டமைப்புக்கும் நிர்மாணத் துறைக்கும் மிகவும் முக்கியமானது என்பதைக் கூற வேண்டும்-என்றார்.

# சனத்தொகையில் 20.3 வீதமானோருக்கு அடிப்படை குடிதண்ணீர் வசதி இல்லை!

கொழும்பு, ஜூலை 24

இலங்கை சனத்தொகையில் 20.3 வீதமானவர்களுக்கு அடிப்படை குடிதண்ணீர் வசதிகள் இல்லை என தெரியவந்துள்ளது.

மக்கள் தொகைக் கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிவரத் திணைக்களம் நடத்திய ஆய்வின் படி, இது தெரியவந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நாட்டில் உள்ள 16.1 வீதமான மக்களுக்கான குடிதண்ணீரின் பிரதான ஆதாரம் பாதுகாப்பற்ற கிணறுதான் என்பதும் தெரியவந்துள்ளது.

இலங்கை மக்கள் பயன்படுத்தும் குடிதண்ணீர் தொடர்பாக மக்கள்தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிவரத் திணைக்களம் நடத்திய ஆய்வின்படி, உள்நாட்டு சனத்தொகையில் ஏறத்தாழ மூன்றில் ஒரு பகுதியினர் தங்கள் வளாகங்களில் பாதுகாப்பான குடிதண்ணீர் சேவையைப் பெற முடியும் என தெரியவந்துள்ளது.

நகர்ப்புற மக்களில் மூன்றில் இரண்டு பங்கு மக்களும், கிராமப்புற மக்களில் நான்கில் ஒரு பகுதியினரும் பாதுகாப்பான குடிதண்ணீரைப் பயன்படுத்துவதாகவும், தோட்டப்புற மக்களில் 3.1 வீதம் மட்டுமே பாதுகாப்பான குடிதண்ணீரைப் பயன்படுத்துவதாகவும் கணக்கெடுப்பில் தெரியவந்துள்ளது.

மேலும், இந்நாட்டு மக்களில் 70 வீதத்துக்கும் அதிகமானோர் தங்கள் வளாகங்களில் மேம்படுத்தப்பட்ட ஆதாரங்களைப் பயன்படுத்தி குடிதண்ணீரைப் பயன்படுத்துவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, இலங்கையின் சனத்தொகையில் 6.3 வீதமானோர் அடிப்படை சுகாதார சேவைகளைப் பயன்படுத்துவதில்லை என்றும் 0.1 வீதமான மக்கள் திறந்த வெளியில் மலம் கழிப்பதாகவும் குறித்த ஆய்வில் தெரியவந்துள்ளது.

இலங்கையில் 84.9 வீதமான குடும்ப மக்கள் மூடிய கழிவறைகளைப் பயன்படுத்துவதாக மக்கள் தொகைக் கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிவரத் திணைக்களம் மேற்கொண்ட ஆய்வில் மேலும் தெரியவந்துள்ளது.(அ)

# நான் இப்போது ரணில் பக்கம்!

## கூறுகிறார் லொஹான் ரத்வத்த



கொழும்பு, ஜூலை 24

"நான் மகிந்த ராஜபக்சவின் வலது கை என்ற போதிலும் நாட்டின் நலன்கருதி ஜனாதிபதி ரணில் பக்கம் தற்போது நிற்கின்றேன். அடுத்த ஜனாதிபதி தேர்தலிலும் அவருக்கே வாக்களிப்பேன்." - என்று இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு-

பண்டாரநாயக்க எனது மாமா, சிறிமா எனது அத்தை, சந்திரிக்கா எனது அக்கா, ஜெனரல் ரத்வத்த எனது தந்தை, இவ்வாறு அரசியல் பின்னணி கொண்ட குடும்பத்தில் இருந்தே நான் அரசியலுக்கு வந்துள்ளேன்.

எனவே, ஜே.வி.பியினரின் மிரட்டல்களுக்கு அஞ்சமாட்டோம். பேய்களுக்கு பயமெனில் சுடுகாட்டில் வீடு கட்டமாட்டோம் என்பதை அநுரகுமார திஸாநாயக்கவுக்கு கூறி வைக்க விரும்புகின்றோம்.

ரணிலுக்கு ஆதரவாக நாடாளுமன்றத்தில் வாக்களிக்கும் போது கை நடுங்கியது. ஆனால் அந்த முடிவு சரியென்பது இன்று உறுதியாகியுள்ளது. அது மகிழ்ச்சியளிக்கின்றது. எனவே, அடுத்த தேர்தலிலும் நான் ரணில் பக்கம்தான் நிற்பேன். ரணிலை ஜனாதிபதியாக்கிவிட்டே அடுத்து கம்பஹாவுக்கு வருவேன்-என்றார். (அ)

# விவசாயிகளுக்கு வட்டியில்லா கடன்!

## விவசாய நவீனமயமாக்கல் திட்டத்தின் கீழ்

கொழும்பு, ஜூலை 24

விவசாய நவீனமயமாக்கல் வேலைத்திட்டத்தின் கீழ் முதல் கட்டமாக விவசாய தொழில் முயற்சியாளர்கள் மற்றும் விவசாயிகளுக்கு வட்டியில்லாக் கடன்களை வழங்கும் செயல்முறை தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தம் நேற்று முன்தினம் ஜனாதிபதி அலுவலகத்தில் கையெழுத்திடப்பட்டது.

முதல் கட்டத்தில், இந்த வேலைத்திட்டத்துக்கு பங்களிப்பை வழங்கும் இலங்கை வங்கி, பிரதேச அபிவிருத்தி வங்கி ஆகியவற்றுடன், விவசாய, பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சின் செயலாளர் ஜானக தர்மகீர்த்தி இந்த புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கைச்சாத்திட்டார்.

இதன்படி எதிர்காலத்தில் மக்கள் வங்கியுடனும் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட உள்ளது.

விவசாய நவீனமயமாக்கல் வேலைத்திட்டத்தின் முதற்கட்டமாக முன்னோடித் திட்டங்களை நடைமுறைப்படுத்த தெரிவு செய்யப்பட்ட 26 பிரதேச செயலகங்களில் விவசாய நவீனமயமாக்கல் நிலையங்கள் ஊடாக வேலைத் திட்டங்களை நடைமுறைப்படுத்த தலா 25 மில்லியன் ரூபா வீதம் 650 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

இரண்டாம் கட்டமாக 10 மில்லியன் ரூபா பெறுமதியான விவசாய நவீனமயமாக்கல் திட்டங்களை நடைமுறைப்படுத்த 75 பிரதேச செயலகங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. பிரதேச செயலகங்களில் விவசாய நவீனமயமாக்கல் திட்டங்களை நடைமுறைப்படுத்தும் போது, குறித்த வேலைத்திட்ட செலவில் 30 வீதத்திற்கும் அதிகமான பங்களிப்பை விவசாயத் தொழில்முயற்சியாளர்கள் மற்றும் விவசாயிகள் வழங்குவதுடன், மீதமுள்ள 70 வீதம் அரசாங்கத்தின் பங்களிப்பாகவும் உள்ளது.

சுழற்சி முறைக் கடன் திட்டமாக செயல்படுத்தும் வகையில், அரசு வழங்கிய பங்களிப்பை விவசாய நவீனமயமாக்கல் கடன் திட்டத்தின் கீழ் வட்டியில்லாக் கடனாக, இலங்கை, மக்கள் வங்கி மற்றும் பிரதேச அபிவிருத்தி வங்கி ஆகிய மூன்று அரச வங்கிகளில் இருந்து பயனாளிகள் தேர்ந்தெடுக்கும் வங்கி மூலம் திருப்பப் பெற்றுக்கொள்ளக் கூடிய வகையில், பொறிமுறையொன்றைத் தயாரித்து நடைமுறைப்படுத்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் முன்வைக்கப்பட்ட அமைச்சரவைப் பத்திரத்திற்கு அங்கீகாரம் கிடைத்துள்ளது.

(அ)

# அஸ்வெசும 2ஆம் கட்டத்தின் கணக்கெடுப்பு 31இல் நிறைவு

கொழும்பு, ஜூலை 24

அஸ்வெசும நலன்புரி திட்டத்தின் இரண்டாம் கட்டத்திற்கான கணக்கெடுப்பை எதிர்வரும் 31 ஆம் திகதிக்குள் நிறைவு செய்ய திட்டமிட்டுள்ளதாக நலன்புரி நன்மைகள் சபையின் தலைவர் ஜயந்த விஜேரத்ன தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

முதற்கட்டமாக இத்திட்டத்துக்கு விண்ணப்பிக்கத் தவறிய குடும்பங்களுக்கான சந்தர்ப்பத்தை ஏற்கனவே வழங்கியிருந்தோம்.

இதில் சுமார் 4 இலட்சத்து 54 ஆயிரத்து 924 விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றன. நுவரெலியா மற்றும் பதுளை மாவட்டங்களில் இருந்து மாவட்ட மட்டத்தில் அதிகளவான விண்ணப்பங்கள் கிடைக்கப் பெற்றுள்ளன.

ஒவ்வொரு கிராம உத்தியோகத்தர் பிரிவுக்கும் கணக்கெடுப்பு அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். கணக்கெடுப்பு அலுவலரால் தகவல் கட்டமைக்கப்பட்ட பின்னர்,

அனைத்து பிரதேச செயலாளர்களும் கிராம உத்தியோகத்தர் பிரிவு ரீதியில் விண்ணப்பதாரர்களின் முழுமையான விவரங்களை கண்காணிக்க முடியும்.

கணக்கெடுப்பின் முடிவில், அந்தந்த குடும்பங்களின் தகவல்கள் தேர்வுக் குழுக்களால் கண்காணிக்கப்படுகின்றன. தேர்வுக் குழுக்கள் கணக்கெடுத்த, குடும்பத்தின் தகவலைக் கண்காணித்து, தெரிவு அளவுகோல்களின் கணக்கீட்டை அங்கீகரிக்கும் பணிகள் முன்னெடுக்கப்படும்.

இவ்வாறு, தெரிவு அளவுகோல்கள் கணக்கிடப்பட்ட பின்னர், வறுமையைக் கணக்கிடுவதற்கு ஒரு மதிப்பெண் வழங்கப்படுகிறது. இந்த நலன்களுக்கு விண்ணப்பிக்கும்போது எப்போதும் மிகச்சரியான தகவல்களை வழங்குமாறும் நாம் கோரிக்கை விடுக்கின்றோம்-என்றார். (அ)

# பாணின் விலையைக் குறைக்க தவறினால் கட்டுப்பாட்டு விலை

## பேக்கரி உரிமையாளர்களுக்கு எச்சரிக்கை

கொழும்பு, ஜூலை 24

பேக்கரி உரிமையாளர்கள் பாணின் விலையை குறைக்கத் தவறினால், பாணுக்கு கட்டுப்பாட்டு விலை அறிமுகம் செய்யப்படும் என அரசாங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

வர்த்தக விவகார அமைச்சர் நளின் பெர்னாண்டோ இவ்வாறு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

எதிர்வரும் இரண்டு நாட்களில் பேக்கரி உரிமையாளர்கள் பாணின் விலையை குறைக்காவிட்டால் கட்டுப்பாட்டு விலை அறிமுகம் செய்யப்படும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

பேக்கரி உற்பத்தியாளர்களைச் சந்தித்து பாண் மற்றும் பேக்கரி உற்பத்திகளின் விலைகளை குறைக்குமாறு கோரியதாகவும் அவர் தெரிவித்தார்.

குறிப்பாக 450 கிராம் எடையுடைய பாணின் விலை மக்களினால் உணரக் கூடிய வகையில் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அமைச்சர் நளின் பெர்னாண்டோ உறுதியளித்தார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தலை பிற்போட முற்பட்டால் பங்களாதேஷ் நிலையே இங்கும்!

## பெரமுனவின் எம்.பி. எச்சரிக்கை

கொழும்பு, ஜூலை 24

**ஜனாதிபதி தேர்தல் ஏதேனுமொரு வழியில் பிற்போடப் படுமானால் இன்று பங்களாதேஷில் நடப்பதுதான் நாளை இலங்கையிலும் நடக்கும் என்று எச்சரிக்கை விடுத்துள்ளார் பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் சன்ன ஜயசுமண.**



இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு-

ஜனாதிபதித் தேர்தலை பிற்போடுவதற்கு பல முயற்சிகள் எடுக்கப்பட்டன. எனினும், அவை கைகூடவில்லை. அரசமைப்பின் 22 ஆவது திருத்தச் சட்டமூலத்தை பாராளுமன்றத்தில் முன்வைத்தால்கூட தேர்தல் ஒத்திவைப்பதற்குரிய சாத்தியம் குறைவு.

அரசமைப்பின் பிரகாரம் ஒக்ரோபர் 16 ஆம் திகதிக்கு முன்னர் தேர்தல் நடத்தப்பட்டாக வேண்டும், அதற்காக இறுதிவரை காத்திருக்க முடியாது. மீள் வாக்கெடுப்பை நடத்த வேண்டிய தேவை ஏற்படின் இரு வாரங்கள் அவசியம். எனவே, ஒக்ரோபர் 2 ஆம் திகதிக்கு முன்னர் தேர்தல் நடத்தப்பட்டாக வேண்டும்.

அந்தவகையில் செப்ரெம்பர் 21 அல்லது 28 இல் தேர்தல் நடத்தப்படாக வேண்டும்.

அவ்வாறு அல்லாமல் வேறு ஏதேனும் வழியில் ஜனாதிபதித் தேர்தலை ஒத்திவைக்க முயற்சி எடுக்கப்பட்டால் பங்களாதேஷில் இன்று நடப்பது, நாளை இலங்கையில் நடக்கலாம்-என்றார். (அ)

# கடலோர பாதுகாப்பு சட்டங்கள் புதுப்பிப்பு

## அமைச்சரவைப் பத்திரம் விரைவில்

கொழும்பு, ஜூலை 24

கடலோர பாதுகாப்பு தொடர்பான சட்டங்கள் புதுப்பிக்கப்பட்டு வருகின்றன. கடற்கரை மாசுபாடு மற்றும் சட்டவிரோத கட்டுமானங்களை கட்டுப்படுத்துவதே இதன் நோக்கமாகும். இதன்படி கரையோர வளங்கள் மற்றும் கரையோர முகாமைத்துவத் திட்டம் புதுப்பிக்கப்படும் என நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார். இது தொடர்பான அமைச்சரவை பத்திரம் விரைவில் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

1981 ஆம் ஆண்டின் 57 ஆம் இலக்க கரையோரப் பாதுகாப்பு மற்றும் கரையோர வள முகாமைத்துவச் சட்டத்தின் கீழ், இலங்கையின் கரையோர வலயங்களை நிர்வகிப்பதற்கு "இலங்கை கரையோர வலயம் மற்றும் கரையோர முகாமைத் துவத் திட்டம்" தயாரிக்கப்பட்டு செயல்படுத்தப்படுகிறது. ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை இந்த் திட்டத்தைப் புதுப்பிக்க வேண்டும் என்பது சட்டப்பூர்வமான தேவை. 2024 ஆம் ஆண்டில், இலங்கையின் கரையோர வலயங்கள் மற்றும் கரையோர முகாமைத்துவத் திட்டம் அதற்கேற்ப புதுப்பிக்கப்படும் என்று அமைச்சர் தெரிவித்தார். (அ)

# 24 மணித்தியாலங்களில் 732 சந்தேக நபர்கள் கைது

கொழும்பு, ஜூலை 24

நாடளாவிய ரீதியில் கடந்த 24 மணித்தியாலத்தில் மேற்கொள்ளப்பட்ட யுக்திய நடவடிக்கையின் கீழ், 732 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர்களில் 719 ஆண்களும் 13 பெண்களும் அடங்குவதாக பொலிஸார் கூறினார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களில் 17 பேர் பொலிஸ் தடுப்பு காவலில் வைக்கப்பட்டுள்ளதுடன், 127 பேர் புனர்வாழ்வு நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

குறித்த சந்தேக நபர்கள் அனைவரும், போதைப்பொருள் குற்றம் தொடர்பாக கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களிடமிருந்து 178 கிராம் 303 மில்லிகிராம் ஹெரோயின், 327 கிராம் 281 மில்லிகிராம் ஐஸ், 1,907 கிராம் 588 மில்லிகிராம் கஞ்சா மற்றும் 3,405 போதை மாத்திரைகள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# தோழியின் ஏ.ரி.எம். அட்டையை திருடி பணம் பெற்ற காதலன், காதலி கைது!

கொழும்பு, ஜூலை 24

தோழியின் ஏ.ரி.எம் அட்டையைத் திருடி 310,000 ரூபா பணத்தைப்பெற்றதாகக் கூறப்படும் 18 வயதுடைய யுவதியும் யுவதியின் காதலனும் கைது செய்யப்பட்டுள்ளதாக அஹங்கம பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபரான யுவதி கடந்த 20 ஆம் திகதி தனது தோழியின் வீட்டுக்குச் சென்றுள்ள நிலையில் இருவரும் இணைந்து நகரத்துக்கு சென்றுள்ளனர்.

இதன்போது, யுவதியின் தோழி தனது ஏ.ரி.எம் அட்டையைப் பயன்படுத்தி 10 ஆயிரம் ரூபா பணத்தைப் பெற்று ஏ.ரி.எம் அட்டையை தனது கையடக்கத் தொலைபேசியின் அட்டைக்குள் வைத்துள்ளார்.

இதனை அவதானித்த யுவதி, புகைப்படம் எடுப்பதாகக் கூறி தனது தோழியின் கையடக்கத் தொலைபேசியை பெற்றுக் கொண்டு அதிலிருந்த ஏ.ரி.எம் அட்டையைத் திருடியுள்ளார்.

பின்னர், இருவரும் தங்களது வீட்டுக்குச் சென்றுள்ளனர். இதன் பின் யுவதியின் தோழி தனது ஏ.ரி.எம் அட்டை காணாமல் போயுள்ளதை அறிந்துள்ளார். பின்னர் அவர் யுவதியின் வீட்டிற்குச் சென்று அவரது பையை சோதனையிட்டபோது தனது ஏ.ரி.எம் அட்டையைக் கண்டுபிடித்தார்.

இதனையடுத்து அவர் இது தொடர்பில் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு அளித்தார். பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் திருடப்பட்டதாகக் கூறப்படும் 310,000 ரூபா பணம் யுவதியின் காதலனிடமிருந்து கைப்பற்றப்பட்டுள்ளது. (அ)

# நீதிமன்ற மனுக்களுக்கும் எனக்கும் தொடர்பில்லை

## கூறினார் ஜனாதிபதி ரணில்

கொழும்பு, ஜூலை 24

ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள மனுக்களுக்கும் தனக்கும் எவ்வித தொடர்பும் இல்லை எனவும் ஜனாதிபதி தேர்தல் நிச்சயமாக நடத்தப்படும் எனவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

ஜனாதிபதி செயலகத்தில் நேற்று முன் தினம் திங்கட்கிழமை பிற்பகல் நடைபெற்ற ஆளும் கட்சி உறுப்பினர்களின் கூட்டத்தில் ஜனாதிபதி இதனைக் கூறினார்.

அனுரகுமார திசாநாயக்கவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவும் பாராளுமன்றத் தேர்தல் குறித்து பேசுகின்றனர். பொதுத்தேர்தலுக்கு பணம் ஒதுக்கப்படவில்லை. ஜனாதிபதித் தேர்தலுக்காக மட்டுமே வரவு செலவுத் திட்டத்தில் 10 பில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது என ரணில் விக்கிரமசிங்க சுட்டிக்காட்டினார்.

ஜனாதிபதி தேர்தல் நடத்தப்பட வேண்டும் எனவும் ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள மனுக்களுக்கும் தனக்கும் எவ்வித தொடர்பும் இல்லை எனவும் ஜனாதிபதி தேர்தல் நிச்சயமாக நடத்தப்படும் எனவும் ஆளும் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களிடம் ஜனாதிபதி வலியுறுத்தியுள்ளார்.

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக வழக்குத் தாக்கல் செய்த ரொஹான் பல்லேவத்தவின் கட்சி அங்கத்துவம் குறித்து அறிய எங்களுக்கு ஒரு நாள் தேவைப்பட்டது எனவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# இரண்டு பிள்ளைகளின் தந்தை சடலமாக மீட்பு

கொழும்பு, ஜூலை 24

ஏ-9 வீதியில் திறப்பனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் நேற்று செவ்வாய்க்கிழமை பலத்த காயங்களுடன் ஆணொருவர் சடலமாக மீட்கப்பட்டதாக திறப்பனை பொலிஸார் தெரிவித்தனர்.

சடலமாக மீட்கப்பட்டவர் அநுராதபுரம், மிஹிந்தலை பகுதியில் வசிக்கும் 38 வயதுடைய இரண்டு பிள்ளைகளின் தந்தை யாவார்.

சடலமாக மீட்கப்பட்டவர் மெல்சிறிபுர பகுதியில் உள்ள ஹோட்டல் ஒன்றில் பணியாற்றி வரும் நிலையில், தனது பணியை முடித்து விட்டு மீண்டும் வீடு நோக்கிச் சென்றுக்கொண்டிருக்கும்போது விபத்துக்குள்ளாகி உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சடலமாக மீட்கப்பட்டவர் வாகனமொன்றில் பயணிக்கும் போது கீழே தவறி வீழ்ந்து உயிரிழந்தாரா அல்லது வீதியில் பயணிக்கும் போது வாகனமொன்று மோதி உயிரிழந்தாரா என்பது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# பங்களாதேஷில் நடந்த கலவரத்தால் இலங்கையர் பாதிப்படையவில்லை!

கொழும்பு, ஜூலை 24

பங்களாதேஷில் ஏற்பட்ட அமைதியின்மை காரணமாக பங்களாதேஷில் உள்ள இலங்கையர்களுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை எனத் தொழில் மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று அறிக்கை ஒன்றை சமர்ப்பித்த அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

1971 இல் பாகிஸ்தானிலிருந்து சுதந்திரம் பெறப் பங்களிப்பு செய்த குடும்பங்களின் வாரிசுகளுக்கு அரசாங்க வேலை வாய்ப்புகளில் 30 சதவீத ஒதுக்கீடு வழங்க பங்களாதேஷ் அரசாங்கம் எடுத்த முடிவுக்கு எதிராக அந்த நாட்டின் பல்கலைக்கழக மாணவர்கள் போராட்டம் நடத்தத் தொடங்கினர்.

இதனால் உருவான கலவர நிலைமையையடுத்து பங்களாதேஷ் அரசாங்கம் நாடு முழுவதும் ஊரடங்கு சட்டத்தை அமுல்படுத்த நடவடிக்கை எடுத்தது. (அ)

# மகளைத் துஷ்பிரயோகம் செய்த தந்தை கைதானார்

## சிறுமி வைத்தியசாலையில்

கொழும்பு, ஜூலை 24

பத்து வயது சிறுமியை பாலியல் துஷ்பிரயோகம் செய்ததாக கூறப்படும் சம்பவம் தொடர்பில் சிறுமியின் தந்தை கைது செய்யப்பட்டுள்ளார்.

பசறை பிரதேசத்தில் வசிக்கும் இரண்டு பிள்ளைகளின் தந்தையொருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

துஷ்பிரயோகத்திற்குள்ளான சிறுமி கடந்த இரண்டு மூன்று நாட்களாக அசாதாரணமான முறையில் நடந்து கொண்டுள்ளார்.

இந்த மாற்றத்தை அவதானித்த சிறுமியின் தாயார், சிறுமியிடம் விசாரித்த நிலையில் கடந்த 19ஆம் திகதி தந்தையால் தாம் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்பட்ட விடயத்தை கூறியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதனையடுத்து தாய் பசறை பொலிஸ் நிலையத்தில் செய்த முறைப்பாட்டின் அடிப்படையில் சந்தேக நபர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டார்.

இந்த நிலையில், சிறுமி பசறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மருத்துவ பரிசோதனைகளுக்காக பதுளை போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நடக்காத தேர்தலுக்கு 65 கோடி ரூபா செலவு

## தேசிய கணக்காய்வு அறிக்கையில் தகவல்

கொழும்பு, ஜூலை 24

**உள்ளூராட்சி மன்றத் தேர்தலை உரிய திகதியில் நடத்த தேர்தல்கள் ஆணைக்குழுவால் முடியாமல் போனாலும் தேர்தல் செலவாக 65 கோடியே 50 இலட்சத்து 96 ஆயிரத்து 226 ரூபாய் செலவழிக்கப்பட்டுள்ளதாக தேசிய கணக்காய்வு அலுவலகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிய வந்துள்ளது.**

2023ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 30ஆம் திகதி ஆகும்போது ஒரு கோடியே 59 இலட்சத்து முப்பத்து 3ஆயிரத்து 472 ரூபாய் மேலும் செலுத்த வேண்டிய செலவினங்களின் பட்டியலில் இருந்ததாக தணிக்கை அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

தேர்தல் செலவுகளில் 15 வீதம் கூடுதல் நேரம் மற்றும் விடுமுறை ஊதியத்துக்கும், 23 வீதம் எழுதுபொருட்கள் வாங்குவதற்கும், 7 வீதம் எரிபொருளுக்கும், 31 வீதம் அச்சிடுவதற்கும், 7 வீதம் விருந்துகளுக்கும், 4 வீதம் பொலிஸ் துறைக்கும் செலவிடப்பட்டதாக கூறப்படுகிறது.

உள்ளூராட்சி மன்றங்களின் பதவிக்காலம் 2023 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 19ஆம் திகதி நிறைவடைந்த நிலையில் குறித்த வேட்புமனு அறிவிப்பு 2023ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 4ஆம் திகதி காட்சிப்படுத்தப்பட்டது.

தேர்தல் தொடர்பில் மூன்று வர்த்தமானிகளும் வெளியிடப்பட்டுள்ளதாக கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தேர்தல்கள் ஆணைக்குழு தொடர்பாக 2023ஆம் ஆண்டின் அடிப்படையில் வெளியிடப்பட்ட செயல்திறன் அறிக்கையில் இடம்பெற்றுள்ள தணிக்கை அறிக்கையில் இந்த தகவல் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

# இலங்கையர்களுக்கு போலந்திலும் வேலை

கொழும்பு, ஜூலை 24

இலங்கைத் தொழிலாளர்களுக்கு வேலை வழங்குவது தொடர்பில் போலந்து அவதானம் செலுத்தியுள்ளதாக வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.

இரு அரசாங்கங்களுக்கு இடையிலான ஒப்பந்தத்தின் கீழ் போலந்து வேலை வாய்ப்புகளை வழங்க திட்டமிட்டுள்ளதாக அமைச்சர் கூறியுள்ளார்.

இலங்கையர்கள் போலந்திற்குள் நுழைவதற்கு விசா வசதிகள் தளர்த்தப்படும் எனவும் அவர் வலியுறுத்தினார்.

போலந்துக்கு பயணத்தை நிறைவு செய்த பின்னர் அமைச்சர் அலி சப்ரி, தனது "எக்ஸ்" சமூக ஊடக தளத்தில் இது தொடர்பில் பதிவிட்டுள்ளார்.

# கடற்கரையில் பெண்ணின் சடலம்

கொழும்பு, ஜூலை 24

பயாகலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தெற்கு பயாகலை கடற்கரையில் பெண் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சடலமாக மீட்கப்பட்டவர் தொடர்பில் எந்தவித தகவலும் கிடைக்கவில்லை என பொலிஸார் கூறினர்.

சடலமாக மீட்கப்பட்டவர் 60 முதல் 70 வயது மதிக்கத்தக்கவர் என்பதுடன் 05 அடி உயரமுடையவர் என பொலிஸார் தெரிவித்தனர்.

சடலமானது நாகொடை வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் மேலும் கூறினர். (அ)

# குளவிக் கொட்டுக்கு இலக்கான மாணவர்கள்

## பாடசாலைக்கு பூட்டு

கொழும்பு, ஜூலை 24

குளவிக் கூடு கலைந்து பாடசாலை மாணவர்கள் உட்பட பலரை கொட்டியதால் மடிதியாவல ஆரம்பப் பாடசாலை நேற்று மூடப்பட்டது.

பாடசாலைக்கு அருகில் உள்ள காணியில் உள்ள மரமொன்றில் காணப்பட்ட குளவி கூட்டை அகற்றுவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டவேளை அந்த குளவிக் கூட்டை பருந்துகள் தாக்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

பருந்துகளின் தாக்குதலுக்குப் பின்னர் குளவிகள் கலைந்து பாடசாலை மாணவர் உட்பட பலரை கொட்டிய நிலையில் அவர்களின் நிலைமை கவலைக்கிடமாக இல்லையெனவும் தெரிவிக்கப்பட்டது. (அ)

# ரணிலுக்காக போராடவுள்ள மொட்டுவின் 12 தலைவர்கள்

## இரகசிய கூட்டத்தில் அவர்கள் முடிவு

கொழும்பு, ஜூலை 24

தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைத் தவிர வேறு ஒருவரை ஜனாதிபதித் தேர்தலில் நிறுத்தினால் அதற்கு எதிராக செயற்பட பொதுஜன பெரமுனவின் 12 மாவட்டங்களின் தலைவர்கள் தீர்மானித்துள்ளதாக அரசியல் வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இது தொடர்பான விசேட கலந்துரையாடலொன்று நேற்று முன் தினம் இரவு கொழும்பு மலலசேகர மாவத்தையில் உள்ள இராஜாங்க அமைச்சர் ஒருவரின் இல்லத்தில் இடம்பெற்றது.

இக்கலந்துரையாடலில் 12 மாவட்டங்களைச் சேர்ந்த மொட்டுக் கட்சியின் தலைவர்கள் கலந்துகொண்டனர்.

பெரும்பான்மையினரின் கருத்துக்கு எதிராக சென்று கட்சி வேறு வேட்பாளரை நியமித்தால் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிக்க தீர்மானித்துள்ளதாக அங்கு அவர்கள் முடிவு செய்தனர்.

அதற்காக அவர்கள் தற்போது பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் ஏறக்குறைய 75 மொட்டுக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவை பெற்றுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

ரணில் விக்கிரமசிங்கவின் தேர்தல் பிரசாரத்தை நடைமுறைப்படுத்துவதற்கு தேவையான அமைப்பு ரீதியான செயற்பாடுகளை மாவட்ட மட்டத்தில் உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களுடன் தொடர்பு கொண்டு முன்னெடுப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அரசியல் வட்டாரங்கள் மேலும் கூறின. (அ)

# பாடகி சுஜீவா குணமடைவு

கொழும்பு, ஜூலை 24

அத்துருகிரியவில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்து கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த பிரபல பாடகி கே.சுஜீவா குணமடைந்து வைத்தியசாலையில் இருந்து வெளியேறியுள்ளார்.

கடந்த ஜூலை மாதம் 8ஆம் திகதி அத்துருகிரியவில் பச்சை குத்தும் நிலைய திறப்பு விழாவில் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கி பிரயோகத்தில் க்ளப் வசந்த மற்றும் நயன வசுல விஜேசூரிய என்ற 37 வயதான நபர் ஆகியோர் உயிரிழந்தனர்.

இந்த துப்பாக்கி சூட்டுச் சம்பவத்தில் பாடகி கே.சுஜீவா மற்றும் க்ளப் வசந்தவின் மனைவி உள்ளிட்ட நால்வர் காயமடைந்தனர்.

இந்நிலையில், சுஜீவா ஆரம்பத்தில் தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வந்ததாகவும், காலில் ஏற்பட்ட காயங்கள் குணமடைந்ததை அடுத்து மருத்துவ ஆலோசனையின் அடிப்படையில் சுஜீவா வைத்தியசாலையில் இருந்து வெளியேறியதாகவும் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை, கிளப் வசந்தாவின் மனைவி கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலையின் தீவிர சிகிச்சைப் பிரிவில் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றார். (அ)

# வங்கிகளில் நகைகள் அடகு வைத்தோருக்கு நிவாரணம்

கொழும்பு, ஜூலை 24

வங்கிகளில் தங்க நகைகளை அடகு வைத்துள்ளவர்களுக்கு நிவாரணம் வழங்க அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

நாட்டில் சமீப காலமாக நிலவி வரும் கடுமையான பொருளாதார நெருக்கடி பொருளாதாரத்தின் அனைத்து துறைகளையும் நேரடியாகவும் மறைமுகமாகவும் பாதித்துள்ளதுடன், இதன் விளைவாக தங்கப் பொருட்களை அடமானம் வைப்பது வேகமாக அதிகரித்துள்ளதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.

2019 ஆம் ஆண்டில் சுமார் 210 பில்லியன் ரூபாவாக இருந்த அடமான முன்பணங்களின் நிலுவைத் தொகை, மார்ச் 2024க்குள் 172 வீதமாக அதிகரித்து 571 பில்லியன் ரூபாயாக அதிகரித்துள்ளது என்றும் அரசாங்கம் கூறுகிறது.

அந்த நிலையைக் கருத்தில் கொண்டு, உரிமம் பெற்ற வங்கிகளில் அடமான முன்பணம் பெற்ற குறைந்த வருமானம் பெறும் நபர்களுக்கு நிவாரணம் வழங்கவேண்டிய அவசியம் கண்டறியப்பட்டுள்ளது.

அதன்படி, ஜூன் 30, 2024 அன்று அல்லது அதற்கு முன் உரிமம் பெற்ற வங்கிகளில் இருந்து தனிநபர் அடிப்படையில் வாடிக்கையாளர்கள் ரூ.100,000க்கு மிகாமல் அடமான முன்பணங்களுக்கு ஆண்டுக்கு அதிகபட்சமாக 10 வீதத்துக்கு உட்பட்டு, திறைசேரி பொருத்தமான ஒன்றைச் செயல்படுத்த வட்டி மானியத்தை வழங்கும்.

பண திட்டம், பொருளாதார ஸ்திரப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கை அமைச்சராக ஜனாதிபதியால் முன்வைக்கப்பட்ட முன்மொழிவு அமைச்சரவையால் அங்கீகரிக்கப்பட்டது. (அ)

# இலங்கையில் மீண்டும் தலைதூக்கும் டெங்கு!

## அபாய வலயமாக 23 பிரதேசங்கள்

கொழும்பு, ஜூலை 24

இலங்கையில் டெங்கு நோயின் தாக்கம் அதிகரித்து வருகின்ற நிலையில், மாகாணம், மாவட்ட ரீதியாக டெங்கு நோயால் பாதிக்கப்பட்டவர்களின் விபரத்தை தேசிய டெங்கு நோய் தடுப்புப்பிரிவு வெளியிட்டப்பட்டுள்ளது.

அந்தவகையில், கடந்த ஜனவரி மாதம் முதல் இன்று வரையான காலப்பகுதியில் 31,480 பேர் டெங்கு நோயால் பாதிக்கப்பட்டுள்ளதுடன் 12 பேர் உயிரிழந்துள்ளனர்.

மேலும், மேல் மாகாணத்தில் 39.5 வீதமானோரும், வடக்கில் 14.5 சதவீதமானோரும், மத்திய மாகாணத்தில் 9.7 வீதமானோரும்,

வடமேல் மாகாணத்தில் 6.9 வீதமானோரும், கிழக்கு மாகாணத்தில் 7.3 வீதமானோரும், சப்ரகமுவ மாகாணத்தில் 10.3 வீதமானோரும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மாவட்டங்களின் அடிப்படையில், கொழும்பில் 23.5 வீதமானோரும், கம்பஹாவில் 10.5 வீதமானோரும் களுத்துறையில் 5.5 வீதமானோரும், யாழ்ப்பாணத்தில் 12.7 வீதமானோரும்,

கண்டியில் 8.2 வீதமானோரும், குருநாகலில் 4.3 வீதமானோரும், புத்தளத்தில் 2.6 வீதமானவர்களும், காலியில் 4.5 வீதமானவர்களும், கேகாலையில் 4.1 வீதமானவர்களும், இரத்தினபுரியில் 6.2 சதவீதமானவர்களும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதுவரை காலப்பகுதியில் டெங்கு நோய் அபாய வலயமாக 23 பிரதேசங்கள் இனங்காணப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



# வீட்டில் நகை திருடியவர்கள் 5 நாட்கள் தடுப்புக் காவலில்

## நகைகளை வாங்கி உருக்கிய நால்வரிடம் தீவிர விசாரணை

கல்முனை, ஜுலை 24

**வீடுகளை உடைத்து தங்க நகைகள் மற்றும் பணத்தை திருடும் சம்பவங்களில் நீண்ட காலமாக ஈடுபட்ட இரண்டு சந்தேக நபர்களை 5 நாட்கள் தடுப்புக் காவலில் வைத்து விசாரணை நடத்த நீதிமன்று உத்தரவிட்டுள்ளது. அதே வேளை, திருடிய நகைகளை வாங்கி உருக்கிய நான்கு நகைக்கடை உரிமையாளர்களிடம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.**

அம்பாறை, பெரிய நீலாவணை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மருதமுனை புறநகர் பகுதிகளில் உள்ள 4 வீடுகளில் ஒரே நாளில் பெறுமதியான பொருட்கள் திருடப்பட்டதாக பாதிக்கப்பட்டவர்களால் முறைப்பாடுகள் செய்யப்பட்டன.

இந்த முறைப்பாடுகளுக்கு அமைய பெரிய நீலாவணை பொலிஸார் உடனடியாக புலன் விசாரணைகளை ஆரம்பித்திருந்ததுடன் திருட்டு இடம் பெற்ற பகுதிகளில் உள்ள சி. சி. ரிவி கமராக்களின் காட்சிகளையும் ஆராய்ந்தனர்.

இதற்கமைய திருடப்பட்ட வீடுகளில் அதிகாலை ஒரு மணி முதல் 3 மணி வரை திருடர்கள் கைவரிசைகளை காட்டியிருந்ததை அவதானித்தனர்.

மேலும், விசாரணைகளைத் துரிதப்படுத்தி இருந்த பெரிய நீலாவணை பொலிஸாருக்கு அந்தப் பகுதியில் உள்ள வீட்டில் போதைப்பொருள் பாவனை இடம்பெறுவதாக இரகசிய தகவல் ஒன்று கிடைக்கப் பெற்றது.

இதனையடுத்து, துரித கதியில் செயல்பட்ட பொலிஸ் குழுவினர், திருடர்கள் பதுங்கியிருந்த வீட்டினை முற்றுகையிட்டு அங்கிருந்த 2 சந்தேக நபர்களை கைது செய்தனர். இதன் போது கடந்த காலங்களில் வீடுகளை உடைத்து திருடிய பெருந்தொகையான நகைகள் மற்றும் பணம், சில போதைப் பொருட்கள் என்பன சூட்சுமமாக மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் மீட்கப்பட்டன.

அத்துடன் கைதான சந்தேக நபர்களிடம் மேலதிக விசாரணைகளை பெரிய நீலாவணை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, பொலிஸ் பரிசோதகர் ஜே. எஸ். கே. வீரசிங்க தலைமையிலான பொலிஸார் மேற்கொண்டதுடன் கல்முனை நீதிமன்ற பதில் நீதிவான் அப்துல் ரசீட் முஹம்மது கலீல் முன்னிலையில் ஞாயிற்றுக்கிழமை முற்படுத்தினர்.

இதன்போது, இரு சந்தேக நபர்களை எதிர்வரும் 25 ஆம் திகதி வரை 5 நாட்கள் தடுப்புக் காலில் வைத்து விசாரணை மேற்கொள்ளுமாறு உத்தரவிட்டுள்ளார்.

மேலும், இந்த இரண்டு சந்தேக நபர்களிடம் இருந்து திருடப்பட்ட தங்க நகைகளை குறைந்த விலைக்கு வாங்கி உருக்கிய கல்முனை நகைக்கடை உரிமையாளர்கள் நால்வரும் கைது செய்யப்பட்டு வாக்குமூலம் பெறப்பட்டதுடன் அவர்களை சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (எ)



# கசிப்பு, ஐஸ் போதையுடன் பெண் உட்பட 16 பேர் கைது

காத்தான்குடி, ஜுலை 24


மட்டக்களப்பு, காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் பொலிஸார் மேற்கொண்ட யுக்திய போதை ஒழிப்பு வேலைத் திட்டத்தின் கீழ், ஐஸ் போதைப்பொருள் மற்றும் கசிப்புடன் பெண் உட்பட 16 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக காத்தான்குடி பொலிஸ் நிலைய பதில் பொறுப்பதிகாரி எஸ். ரமேஷ் தெரிவித்தார்.

நேற்று செவ்வாய்க்கிழமை காலை முன்னெடுக்கப்பட்ட இந்தச் சுற்றிவளைப்பின் போது பெண் உட்பட எட்டுப் பேர் காத்தான்குடி பிரதேசத்தில் ஐஸ் போதைப்பொருளுடன் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதுதவிர நாவற்குடா, நொச்சிமுனை, கல்லடி பிரதேசங்களிலிருந்து சுமார் 40 லீற்றர் கசிப்புடன் எட்டு சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் கூறினர்.

கைது செய்யப்பட்ட நபர்கள் மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டனர். இவர்களிடமிருந்து மீட்கப்பட்ட போதைப் பொருட்களும் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பில் காத்தான்குடி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ)



# உகந்தையில் சிரமதானம்

உகந்தை, ஜுலை 24

வரலாற்று சிறப்பு மிக்க உகந்தை மலை முருகன் ஆலய தீர்த்தோற்சவம் நிறைவுற்றதன் பின்னர் ஆலய வளாகத்தை துப்பரவு செய்யும் பணியை ஆலையடிவேம்பு பிரதேச சமூக நலன் அமைப்பினர் முன்னெடுத்தனர்.

ஆலய வளாகத்தில் பக்தர்களினால் சேமிக்கப்பட்டிருந்த குப்பைகளை அகற்றியதுடன் அங்கு போடப்பட்டிருந்த போத்தல்கள், பொலித்தீன் பைகள் போன்ற டெங்கு பரவும் அபாயப் பொருட்களையும் அகற்றினர். தேவையற்ற பொருட்களை தீயிட்டு கொளுத்தினர்.

அத்தோடு மேலதிகமான குப்பைகளை உழவு இயந்திரத்தின் உதவியுடன் அகற்றி வேறு இடங்களுக்கு எடுத்துச் சென்றனர்.

ஆலய உற்சவகாலத்தின் முன்னர் இதுபோன்ற மாபெரும் சிரமதானப் பணிகளை முன்னெடுத்த இந்த அமைப்பினர் உற்சவ காலங்களில் அடியார்களுக்கு அன்னதானம் வழங்கும் பணியினையும் முன்னெடுத்தனர். (எ)

# சுகாதார மருத்துவ அதிகாரி அலுவலகம் திறப்பு





கல்முனை, ஜுலை 23

தேவை நிமித்தம் முன்னதாக மக்களிடம் கையளிக்கப்பட்டிருந்த கல்முனை தெற்கு சுகாதார மருத்துவ அதிகாரி அலுவலக கட்டடம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை உத்தியோக பூர்வமாக திறந்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்துகொண்ட கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் கட்டடத்தை நாடா வெட்டி திறந்து வைத்தார்.

கல்முனை தெற்கு சுகாதார மருத்துவ அதிகாரி திருமதி சராப்டீன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் முன்னாள் சுகாதார இராஜாங்க அமைச்சரும், பாராளுமன்ற உறுப்பினருமான பைசல் காசிம், கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் என். சிவலிங்கம், கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் டீ. ஜி. எம். கொஸ்தா, கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் திருமதி சகீலா இஸ்ஸடீன், பிராந்திய கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு பிரிவு பொறுப்பு மருத்துவ அதிகாரி எம். சீ. எம். மாஹிர், பிராந்திய மலேரியா தடுப்புப் பிரிவு பொறுப்பு மருத்துவ அதிகாரி எம். எம். நௌஷாட் மற்றும் மருத்துவர்கள் உள்ளிட்ட சுகாதாரத் திணைக்கள உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (எ)

# சர்வதேச மல்யுத்த போட்டியில் மட்டு. மாணவன் ஹரிபிரஷாத்

மட்டக்களப்பு, ஜுலை

தாய்லாந்தில் நடைபெறும் சர்வதேச மட்டத்திலான ஆசிய மல்யுத்த போட்டியில் பங்கேற்க மட்டக்களப்பு, கல்லடி சிவானந்தா தேசிய கல்லூரி மாணவன் ஹரிபிரஷாத் மற்றும் பயிற்றுவிப்பாளர் திருச்செல்வம் ஆகியோர் தாய்லாந்து பயணமாகியுள்ளனர்.

இவர்கள் இருவரையும் வழியனுப்பி வைக்கும் நிகழ்வு கல்லூரி அதிபர் தலைமையில்




நடைபெற்றது.

இந்தப் போட்டிக்கு இலங்கையிலிருந்து செல்லும் ஒரேயொரு தமிழ் மாணவன் ஹரிபிரஷாத் என்பது குறிப்பிடத்தக்கது. (எ)

# நினைவுப் பேருரையும் பரிசளிப்பு வைபவமும்

சாய்ந்தமருது, ஜுலை 24

முன்னாள் அமைச்சர் மர்ஹூம் ஏ. ஆர். மன்சூர் நினைவு தினத்தை முன்னிட்டு சாய்ந்தமருது எம். எஸ். காரியப்பர் வித்தியாலயத்தால் முன்னாள் அமைச்சர் ஏ. ஆர். மன்சூரின் "கறைபடியாச் சேவைகள்" எனும் தலைப்பில் நடைபெற்ற நினைவு தின கட்டுரைப் போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வு சாய்ந்தமருது கலாசார மத்திய நிலையத்தில் நாளை 25 ஆம் திகதி வியாழக்கிழமை நடைபெறவுள்ளது.

ஏ. ஆர். மன்சூர் பௌண்டேஷனின் அனுசரணையில், சாய்ந்தமருது எம். எஸ். காரியப்பர் வித்தியாலய அதிபர் எம். எஸ். எம். ஆரிப் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில், பிரதம விருந்தினராக சாய்ந்தமருது கோட்டக் கல்விப் பணிப்பாளர் திருமதி அஸ்மா மலிக் கலந்து கொள்வார்.

முன்னாள் அமைச்சர் மர்ஹூம் ஏ. ஆர். மன்சூர் பற்றிய நினைவுப் பேருரையை முன்னாள் பிரதேச சபை உறுப்பினரும் ஓய்வுபெற்ற அதிபருமான ஏ. அப்துல் கபூர் ஆற்றுவார்.

இதன்போது, கட்டுரைப் போட்டியில் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வும் நடைபெறவுள்ளது.

முன்னாள் அமைச்சர் மர்ஹூம் ஏ. ஆர். மன்சூரின் மறுமை ஈடேற்றத்துக்காக துஆப் பிரார்த்தனை ஒன்றும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 39 ஆயிரம் பலஸ்தீனர்களை கொன்று குவித்தது இஸ்ரேல்

## காஸாவில் தொடரும் பெரும் சோகம்



காஸா, ஜூலை 24


**தெற்கு காஸாவில் கிழக்கு கான் யூனிஸ் மீது இஸ்ரேல் இராணுவம் நடத்திய கொடூரத் தாக்குதலில் 39 பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டனர். இதன் மூலம் காஸாவில் இதுவரையிலான பலி எண்ணிக்கை 39 ஆயிரத்தை தாண்டியது.**

கடந்த ஆண்டு ஒக்டோபர் மாதம் 7 ஆம் திகதி அன்று ஆரம்பித்த காஸா மீதான இஸ்ரேலின் போரில் இதுவரை 39, 006 பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டனர். மேலும் 89, 818 பேர் காயமடைந்துள்ளனர். ஹமாஸ் தலைமையிலான தாக்குதல்களில் இஸ்ரேலில் இறந்தவர்களின் எண்ணிக்கை 1, 139 என மதிப்பிடப்பட்டுள்ளது. மேலும், ஆயிரக்கணக்கான மக்கள் இன்னும் காஸாவில் சிறைபிடிக்கப்பட்டுள்ளனர். இந்த நிலையில் நேற்று கிழக்கு கான் யூனிஸ் மீது இஸ்ரேலின் புதிய தாக்குதலைத் தொடர்ந்து 39 பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டனர் என்றும், பலர் காயமடைந்துள்ளனர் என்றும் தகவல் வெளியாகியுள்ளது.

ஜோர்டானின் வெளிவிவகார அமைச்சர் அய்மன் சபாடி இஸ்ரேலின் தாக்குதலுக்கு கண்டனம் தெரிவித்துள்ளார்.

மேலும், "காஸா, குழந்தைகளின் கல்லறையாக மட்டும் மாறவில்லை. இது சர்வதேச சட்டத்துக்கான கல்லறையாக மாறியுள்ளது, ஒட்டுமொத்த சர்வதேச ஒழுங்கின் அவமானகரமான கறையாக மாறியுள்ளது. இது ஒரு போர்க் குற்றம்" என்றும் தெரிவித்துள்ளார். வெஸ்ட் பேங்கில் இரண்டு நாட்களுக்கு ஒரு பலஸ்தீன குழந்தை கொல்லப்பட்டதாக ஐக்கிய நாடுகளின் குழந்தைகள் முகமை (யுனிசெப்) தெரிவித்துள்ளது.

கடந்த ஒன்பது மாதங்களில் மொத்தம் 143 பலஸ்தீன குழந்தைகள் உயிரிழந்தனர். இது முந்தைய ஒன்பது மாதங்களுடன் ஒப்பிடுகையில் கிட்டத்தட்ட 250 சதவீதம் அதிகமாகும். அதாவது, "பல ஆண்டுகளாக, கிழக்கு ஜெருசலேம் உட்பட வெஸ்ட் பேங்கில் வசிக்கும் குழந்தைகள் கொடூரமான வன்முறைக்கு ஆளாகியுள்ளனர்" என்று யுனிசெப் நிர்வாக இயக்குநர் கேத்தரின் ரஸ்ஸல் கூறினார். (எ)



# பாராளுமன்றை சுமுகமாக நடத்த அனைவரின் ஒத்துழைப்பும் தேவை

## எதிர்க்கட்சிகளிடம் பிரதமர் மோடி கோரிக்கை


புதுடில்லி, ஜூலை 24

பாராளுமன்றத்தை சுமுகமாக நடத்த ஒத்துழைப்பு வழங்குமாறு எதிர்க்கட்சி எம். பிக்களிடம் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்தியப் பாராளுமன்ற மழைக்கால கூட்டத்தொடர் நேற்று முன்தினம் தொடங்கியது. இதனை முன்னிட்டு பாராளுமன்ற வளாகத்தில் செய்தியாளர்களைச் சந்தித்த பிரதமர் மோடி தெரிவிக்கையில், "இது வொரு நேர்மறையான அமர்வாக இருக்க வேண்டும். இது முக்கியத்துவம் வாய்ந்த கூட்டத் தொடர் என்பதால், இது இந்திய ஜனநாயகத்தின் பயணத்தில் ஒரு முக்கியமான மைல்கல். அடுத்த ஐந்தாண்டுகளுக்கு நாட்டுக்காக உழைக்க வேண்டியது ஒவ்வொரு பாராளுமன்ற உறுப்பினரின் மற்றும் ஒவ்வொரு அரசியல் கட்சியினரின் கடமை. இந்த பட்ஜெட் அடுத்த ஐந்தாண்டுகளுக்காக நாம் செய்யப் போகும் பணிக்கான திசையை வழங்கும்.

பாராளுமன்ற கூட்டத் தொடரை சுமுகமாக நடத்த அனைவரின் ஒத்துழைப்பும் தேவை. ஆக்கபூர்வமான கூட்டத் தொடர் நடைபெற வேண்டும் என மக்கள் விரும்புகின்றனர்.

மேலும், இந்தியா சுதந்திரம் அடைந்து 100 ஆண்டுகள் நிறைவடையும் 2047ஆம் ஆண்டுக்குள் "விக்சித் பாரத்" என்ற வளர்ந்த இந்தியா என்கிற நமது கனவுக்கு இந்த பட்ஜெட் அடித்தளம் அமைக்கும். பாராளுமன்றத்தில் தொடர்ச்சியாக இடையூறுகள் செய்யப்படுவதால் ஒரு சில உறுப்பினர்களால் தங்களது கருத்துக்களை தெரிவிக்க முடியவில்லை என்பதை நினைத்து நான் வருத்தப்படுகிறேன்- என்றார். (எ)




# சுற்றுலா பயணிகளுக்கு எதிராக ஸ்பெயினில் மக்கள் போராட்டம்

பார்சிலோனா, ஜூலை 24

வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கு எதிராக ஸ்பெயினில் மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

ஐரோப்பிய நாடான ஸ்பெயினில் சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை கடந்த ஆண்டை விட சுமார் 13. 6 சதவீதம் அதிகரித்துள்ளதாக அந்த நாட்டின் ஐ. என். இ. என்ற நிறுவனம் தெரிவித்துள்ளது. நடப்பு ஆண்டின் முதல் ஐந்து மாதங்களில் மட்டும் வெளிநாடுகளைச் சேர்ந்த சுமார் 3. 30 கோடி சுற்றுலா பயணிகள் ஸ்பெயின் வருகை தந்துள்ளனர்.

சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை உள்நாட்டு மக்களைச் சோர்வடையச் செய்துள்ளது. மேலும், அதற்கு தங்களது எதிர்ப்பை தெரிவிக்கும் வகையில் ஸ்பெயின் நாட்டின் பார்சிலோனாவில் அங்காடிகள் நிறைந்த வீதியில் மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். அப்போது சுற்றுலா பயணிகளை நோக்கி இங்கு வர வேண்டாம் என்றும் கோஷங்கள் எழுப்பினர். விளையாட்டுத் துப்பாக்கியை கொண்டு தண்ணீரை வெளியேற்றி எதிர்ப்பை வெளியிட்டனர். (எ)

# தாய்வான் எல்லைக்குள் பறந்த போர் விமானங்களால் பதற்றம்


## சீனாவுக்கு தாய்வான் எச்சரிக்கை

தைபே நகரம், ஜூலை 24

தாய்வான் எல்லைக்குள் பறந்த சீன போர் விமானங்களால் பெரும் பதற்றம் ஏற்பட்டது.

சீனாவின் 15 விமானங்கள் இவ்வாறு எல்லையைத் தாண்டி தாய்வானுக்குள் நுழைந்ததாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

சீனாவின் கட்டுப்பாட்டில் இருந்த தாய்வான் 1949இல் தனிநாடாக பிரிந்தது. ஆனால், அதனை மீண்டும் தன்னுடன் இணைத்துக் கொள்ள சீனா துடிக்கிறது. இதன்படி தாய்வான் எல்லையில் போர்க் கப்பல் மற்றும் விமானங்களை அனுப்பி அவ்வப்போது சீனா பதற்றத்தை ஏற்படுத்துகின்றது. ஆனால், சீனா தங்களைத் தாக்கினால் திருப்பித் தாக்குதல் நடத்த தயாராக இருப்பதாக தாய்வானும் எச்சரிக்கை விடுத்துள்ளது.



இந்த நிலையில் தாய்வானின் எல்லையில் சீனாவுக்குச் சொந்தமான 8 போர்க் கப்பல்கள் மற்றும் 22 விமானங்கள் கண்டறியப்பட்டன. இதில் 15 விமானங்கள் எல்லையைத் தாண்டி தாய்வானுக்குள் நுழைந்ததாக கூறப்படுகிறது. இதனால் கடல் மற்றும் வான் எல்லைப் பகுதியை உன்னித்து கவனித்து வருவதாக தாய்வான் பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது. (எ)

# 5 இலட்சம் இராணுவத்தினர் உக்ரைனுக்கு உதவத் தயார்

பிரஸ்சல்ஸ், ஜூலை 24

உக்ரைனுக்கு உதவ நேட்டோ கூட்டமைப்பைச் சேர்ந்த 5 இலட்சம் இராணுவத்தினர் தயார் நிலையில் உள்ளதாக நேட்டோ செய்தித் தொடர்பாளர் பரா தக்லல்லாஹ் தெரிவித்தார்.

உலகின் மிகப்பெரிய இராணுவக் கூட்டமைப்பான நேட்டோ பெல்ஜியத்தை தலைமையிடமாக கொண்டு செயல்படுகிறது. இந்தக் கூட்டமைப்பில் தற்போது 32 நாடுகள் உள்ளன. இதன் கடைசி உறுப்பு நாடாக சுவீடன் கடந்த மார்ச் மாதம் இணைந்தது. இந்த கூட்டமைப்பில் இணைய உக்ரைனும் பல ஆண்டுகளாக முயற்சித்து வருகிறது.

ஆனால், சில உறுப்பு நாடுகளின் எதிர்ப்பால் உக்ரைனால் இன்னும் இணைய முடியவில்லை. இதற்கிடையே உக்ரைனின் இந்த முயற்சிக்கு எதிர்ப்பு தெரிவித்து ரஷ்யா அதன் மீது போர் தொடுத்தது. எனவே, உக்ரைனுக்கு ஆதரவாக நேட்டோ கூட்டமைப்பில் உள்ள நாடுகள் பல்வேறு உதவிகளை வழங்குகின்றன. அவற்றின் மூலம் உக்ரைனும் ரஷ்யாவுக்கு பதிலடி கொடுத்து வருகிறது.

இந்த நிலையில் நேட்டோ கூட்டமைப்பைச் சேர்ந்த 5 இலட்சம் இராணுவத்தினர் தயார் நிலையில் உள்ளனர். எனவே, ரஷ்யாவை தனிமைப்படுத்தவும், உக்ரைனுக்கு வழங்கப்படும் இராணுவ உதவிகளை மேலும் அதிகரிக்கவும் முயற்சிகள் நடைபெறுவதாக நேட்டோ செய்தித் தொடர்பாளர் பரா தக்லல்லாஹ் கூறினார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 25,000 பேரை ஆசிரியர் சேவையில் உள்ளீர்க்க அரசாங்கம் நடவடிக்கை

## உயர்நீதிமன்றில் கூறினார் சட்டமா அதிபர்

கொழும்பு, ஜூலை 24

**அரசாங்க பாடசாலைகளில் தற்போது ஆசிரியர்களாக பணிபுரியும் அபிவிருத்தி உத்தியோகத்தர்களை நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தி, தகைமைகளை பூர்த்தி செய்யும் அனைவரையும் ஆசிரியர் சேவையில் உள்ளீர்ப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதாக சட்ட மா அதிபர் நீதிமன்றத்துக்கு அறிவித்துள்ளார்.**

இது தொடர்பான அமைச்சரவைப் பத்திரம் கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜயந்தவினால் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப் படவுள்ளதாகவும் சட்ட மா அதி பர் சார்பில் ஆஜராகியிருந்த மேலதிக சொலிஸிட்டர் ஜெனரல் விராஜ் தயாரத்ன உயர் நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

பல வருடங்களாக ஆசிரியர் சேவையில் ஈடுபட்டுள்ள தம்மை ஆசிரியர் சேவையில் உள்ளீர்க்காததால், தமது அடிப்படை உரிமை மீறப்பட்டுள்ளதாக நீதிமன்றம் தீர்ப்பளிக்க வேண்டுமெனக் கோரி தற்போது ஆசிரிய சேவையில் ஈடுபட்டுள்ள அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஒரு தரப்பினர் இந்த அடிப்படை உரிமை மனுவை தாக்கல் செய்திருந்தனர்.

இந்த மனு மீதான விசாரணை நேற்று முன் தினம் நீதிமன்றத்தில் நடைபெற்றபோதே, மேலதிக சொலிஸிட்டர் ஜெனரல் நீதிமன்றத்தில் இவ்வாறு தெரிவித்தார்.

மேற்படி மனு ஏ. எச். எம். டீ.நவாஸ், அச்சல வெங்கப்புலி மற்றும் ஷிரான் குணரத்ன ஆகியோரடங்கிய உயர்நீதிமன்ற நீதிபதிகள் குழாம் முன்னிலையில் நேற்று முன் தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இரு தரப்பினராலும் இதற்கு முன்னர் மனு தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட இணக்கப்பாட்டுக்கு இணங்க, அதனோடு சம்பந்தப்பட்ட இணக்கப்பாட்டு நிபந்தனையை மேலதிக சொலிஸிட்டர் ஜெனரல் உயர் நீதிமன்றத்தில் சமர்ப்பித்தார்.

தற்போது ஆசிரியர் சேவையில் ஈடுபட்டுள்ள 25,000 அபிவிருத்தி உத்தியோகத்தர்களை விசேட நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தி தகைமைகளை பூர்த்தி செய்பவர்களை ஆசிரியர் சேவையில் உள்ளீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். இதன்படி 40 வயது உச்ச வயதெல்லையின் கீழ் தேசிய பாடசாலைகளுக்கும் 45 வயது என்ற உச்ச வயதெல்லையின் கீழ் மாகாண பாடசாலைகளுக்கும் அவர்களை நியமிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அந்த வகையில் மேற்படி நியமனங்கள் தொடர்பான அமைச்சரவைப் பத்திரத்தை விரைவில் அமைச்சரவையில் சமர்ப்பித்து அமைச்சரவையின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொண்ட பின்னர், இந்த நியமனமனங்கள் வழங்கப்படும் என மேலதிக சொலிஸிட்டர் ஜெனரல் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பிலான விடயங்களை மனு ஒன்றின் மூலம் நீதிமன்றத்திற்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

(அ)

# ஓட்டோவுக்குள் சடலம் மீட்பு!

கொழும்பு, ஜூலை 24

கொழும்பு, வார்ட் பிளேஸில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஓட்டோவுக்குள் கூரிய ஆயுதங்களால் தாக்கப்பட்ட நபரின் சடலம் ஒன்று கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

உயிரிழந்தவர் 33 வயது மதிக்கத்தக்கவர் என பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று அதிகாலை 1 மணியளவில் கறுவாத்தோட்டம் பொலிஸாருக்கு கிடைத்த தகவல் ஒன்றின் அடிப்படையில் தேசிய பல் வைத்தியசா லைக்கு அருகில் குறித்த ஓட்டோ கண்டுபிடிக்கப்பட்டது.

பின்னர் குறித்த ஓட்டோ தொடர்பில் மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் நடத்திய விசாரணையில் அது மித்தெனிய பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவருடையது என தெரியவந்துள்ளது.

குறித்த நபரிடம் வினவிய போது, ஓட்டோவை 33 வயதுடைய தனது மைத்துனருக்கு வாடகைக்குச் செலுத்த வழங்கியதாக தெரிவித்தார்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கறுவாத்தோட்டம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(அ)

# சட்டவிரோதமாக கொண்டுவரப்பட்ட மஞ்சள் பொதிகளுடன் ஒருவர் கைது

கொழும்பு, ஜூலை 24

பமுனுகம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட உஸ்வெட்டகெட்டியாவ பகுதியில் படகு மூலம் சட்டவிரோதமாகக் கொண்டுவரப்பட்ட மஞ்சள் பொதிகளுடன் சந்தேக நபரொருவர் கைது செய்யப்பட்டதாக பமுனுகம பொலிஸார் தெரிவித்தனர்.

பமுனுகம பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டார்.

நீர்கொழும்பு பகுதியில் வசிக்கும் 49 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டார்.

சந்தேக நபரிடமிருந்து சட்டவிரோதமாகக் கொண்டுவரப்பட்ட 1767.5 கிலோ மஞ்சள் அடங்கிய பொதிகள், 4 படகுகள் மற்றும் மஞ்சள் பொதிகளை ஏற்றிச் செல்ல பயன்படுத்தப்பட்ட பஸ் என்பன கைப்பற்றப்பட்டன.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பமுனுகம பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

(அ)

# ஆலயமொன்றில் தங்க நகைகள் திருடிய உதவிக் குருக்கள் கைது!

யாழ்ப்பாணம், ஜூலை 24

ஊர்காவற்துறை புளியங்கூடல் பகுதியில் உள்ள ஆலயமொன்றில் தங்கம் உள்ளிட்ட ஆபரணங்களைத் திருடிய குற்றச்சாட்டில் 28 வயதான ஆலயத்தின் உதவிக் குருக்கள் கைதானார்.

யாழ். மாவட்ட விசேட குற்றத் தடுப்பு பிரிவினரால் அவர் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட நபரிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளில் பின்னர் 40 பவுண் தங்க நகைகள் மீட்கப்பட்டுள்ளன.

அத்துடன் ஏனைய நகைகள் வங்கியில் அடகு வைக்கப்பட்டுள்ளமை இதன்போது கண்டறியப்பட்டுள்ளது.

சந்தேகநபரை தொடர்ந்தும் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

# பெரமுன - ரணில் பேச்சுகள் ஆரம்பம் நாமல் ராஜபக்ஷவுக்கு பிரதமர் பதவி?

கொழும்பு, ஜூலை 24

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவது தொடர்பில் பொதுஜன பெரமுனவுக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையில் முக்கிய பேச்சுகள் கொழும்பில் ஆரம்பமாகியுள்ளன.

ஜனாதிபதியுடனான பேச்சில் பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷவை பிரதமராக நியமிக்க வேண்டுமென்ற முக்கிய நிபந்தனை ரணில் விக்கிரமசிங்கவுக்கு விதிக்கப்படும் என்று கூறப்படுகின்றது.

ஆரம்பமாகியுள்ள இந்த கலந்துரையாடல்களின் முடிவுகளை அடுத்த இரண்டு வாரங்களுக்குள் அறிவிக்க இரு தரப்பினரும் இணக்கம் எட்டியுள்ளனர். இதன் பிரகாரம் ஆளும் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் நிச்சயமாக இரண்டு வாரங்களுக்குள் அறிவிக்கப்படுவார்.

இணக்கப்பாடுகள் எட்டப்படாவிடின் பொதுஜன பெரமுன தனித்து வேட்பாளர் ஒருவரை களமிறக்க ஏற்கனவே தீர்மானம் எடுத்துவிட்டது. வர்த்தகரும் பாராளுமன்ற உறுப்பினருமான தம்மிக பெரேராவை வேட்பாளராக களமிறக்க அக்கட்சி முடிவுகளை எட்டியுள்ளது.

இதேவேளை, இந்தக் கலந்துரையாடலில் பொருளாதாரம் மற்றும் பொதுஜன பெரமுனவின் கொள்கை தொடர்பிலான பல விடயங்கள் தொடர்பில் இணக்கப்பாடு எட்டப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

எவ்வாறாயினும், கடனை செலுத்தி நாட்டைக் கட்டியெழுப்பக்கூடிய ஒரு தலைவரை வேட்பாளராக நியமிக்க வேண்டும் என்பதே பொதுஜன பெரமுனவின் தீர்மானமாக உள்ளதாக நாமல் தெரிவித்துள்ளார்.

(ஐ)

# 189 கிலோ பீடி இலைகளுடன் கற்பிட்டியில் ஒருவர் கைது!

கொழும்பு, ஜூலை

புத்தளம் கற்பிட்டி, குடாவ கடற்கரைப் பகுதியில் படகு மூலம் சட்டவிரோதமாகக் கொண்டுவரப்பட்ட 189 கிலோ பீடி இலைகளுடன் சந்தேக நபர் ஒருவர் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடல் வழியாக இடம்பெறும் சட்டவிரோத நடவடிக்கைகளைக் கண்காணிப்பதற்காக, கடற்படையினால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது கற்பிட்டிப் பகுதியில் வசிக்கும் 30 வயதான நபரே கைது செய்யப்பட்டார்.

சந்தேக நபரிடம் இருந்து 6 பொதிகளில் 189 கிலோ கிராம் பீடி இலைகளும், படகு ஒன்றும் கைப்பற்றப்பட்டுள்ளது.

# 164 பேருக்கு எதிராக சிவப்பு பிடியாணை!

கொழும்பு, ஜூலை 24

நாட்டில் பல்வேறு குற்றச் செயல்களில் ஈடுபட்ட பின்னர், தப்பிச்சென்று வெளிநாடுகளில் வாழ்ந்து வரும் 164 இலங்கையர்களுக்கு எதிராக சிவப்பு பிடிவிறாந்து உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச பொலிஸாரிடம் இவ்வாறு சிவப்பு பிடிவிறாந்து பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளதாக குற்ற விசாரணைப் பிரிவினர் தெரிவிதுள்ளனர்.

பாதாள உலகக் குழுவின் செயற்பாடுகள், போதைப் பொருள் வர்த்தகம், போதைப் பொருள் கடத்தல், கொலை, கொள்ளை உள்ளிட்ட பல்வேறு திட்டமிட்ட குற்றச் செயல்களுடன் தொடர்புடையவர்களுக்கு எதிராக இவ்வாறு சிவப்பு பிடிவிறாந்து பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

குற்றவாளிகளை நாட்டுக்கு அழைத்து வரும் நோக்கில் சர்வதேச பொலிஸாரின் ஒத்துழைப்பு கோரப்பட்டுள்ளது. இந்தக் குற்றவாளிகளில் அநேகமானவர்கள் டுபாயில் தலைமறைவாக வாழ்ந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் இந்தியா, பிரான்ஸ், இத்தாலி, இங்கிலாந்து உள்ளிட்ட வேறும் நாடுகளிலும் மேலும் சில குற்றவாளிகள் தலைமறைவாக வாழ்ந்து வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

குறிப்பாக கிளப் வசந்த படுகொலையுடன் தொடர்புடையதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ள கஞ்சிபானை இம்ரான் பிரான்ஸில் வாழ்ந்து வருவதாக தகவல்கள் கிடைக்கப் பெற்றுள்ளது.

அத்துடன் கஞ்சிபானை இம்ரானுடன், குடு அஞ்சு என்ற மற்றுமொரு பாதாள உலகக் குழு தலைவரும் பிரான்ஸில் தங்கியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சர்வதேச பொலிஸாரின் ஒத்துழைப்புடன் இந்த சந்தேக நபர்களை கைது செய்து நாட்டுக்கு அழைத்து வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் குற்ற விசாரணைப் பிரிவினர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# பணவீக்கம் அதிகரிப்பு

கொழும்பு, ஜூலை 24

இலங்கை சனத்தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் 2024 ஜூன் மாதத்துக்கான இலங்கையின் தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் மற்றும் மாதாந்த நுகர்வோர் பணவீக்கத்தை வெளியிட்டுள்ளது.

அதன்படி 2024 மே மாதம் 1.6 வீதமாக பதிவாகிய இலங்கையின் பணவீக்கம் 2024 ஜூன் மாதம் 2.4 வீதமாக அதிகரித்துள்ளது.

மே 2024 இல் 0.5 வீதமாக இருந்த உணவு வகை பணவீக்கம் ஜூன் 2024 இல் 1.9 வீதமாக அதிகரித்துள்ளது.

மேலும் உணவு அல்லாத வகையின் பணவீக்கம் மே 2024 இல் 2.4 வீதமாக இருந்து ஜூன் 2024 இல் 2.7 வீதமாக அதிகரித்துள்ளது.

(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முஸ்லிம்களிடம்...

தகனம் செய்வதற்கு பரிந்துரைக்கப் பட்டது. இதன்படி, கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்ட நிலையில் உயிரிழந்த 276 முஸ்லிம்களின் உடல்கள் தகனம் செய்யப்பட்டன. எனினும், 2021 பெப்ரவரி முதல் கடுமை யான கட்டுப்பாடுகளுடன் இறந்தவர் களின் உடல்கள் அடக்கம் செய்ய அனுமதி அளிக்கப்பட்டது.

2021 ஜூலையில் சிறீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் ஆதரவுடன், அப்போதைய நீர் வழங்கல் அமைச்சு கொழும்பு, கண்டி மாவட்டங்களில் "சார்ஸ் - கோவ் - 2" வைரஸைக் கண்ட றியும் ஆய்வை தொடங்கியது. ஆற்று நீர் மற்றும் மருத்துவமனைகள், தனி மைப்படுத்தல் மையங்கள், சாத்தியமான ஏனைய பகுதிகளில் இருந்து வெளி யேறும் கழிவு நீர் ஆய்வுக்கு உட்படுத் தப்பட்டன.

இந்த ஆய்வில் நீரில் சார்ஸ் -கோவ் - 2 வைரஸ் இல்லை என்பது உறுதிப் படுத்தப்பட்டது.

இந்த நிலையில், குறித்த நீரில் வைரஸ் இல்லை என்பது ஆய்வின் மூலம் தெரியவந்தது.

நீர் வழங்கல் மற்றும் பெருந்தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சின் அனுசரணையில் 2024 மார்ச்சில் சீனா - இலங்கை கூட்டு ஆராய்ச்சி மையத்தால் நடத்தப்பட்ட ஆய்விலும் இது உறுதிப்படுத்தப்பட் டது. அத்துடன், நிலத்தடி நீர் உள் ளிட்ட நீரேந்து பகுதிகளில் சார்ஸ் - கோவ் - 2 வைரஸ் பரவுவது பாதுகாப் பான புதைகுழிகள் மூலம் அல்ல என்பது உறுதிப்படுத்தப்பட்டது.

இதன்படி, நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர், வெளிவிவகார அமைச்சர், நீர் வழங்கல் மற்றும் பெருந்தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சர் ஆகியோர் முன்வைத்த பாதிக்கப்பட்ட சமூகத்தினரிடம் மன் னிப்புக் கோரும் கூட்டுப் பிரேரணைக்கு அமைச்சரவை அனுமதி அளித்துள்ளது.

அத்துடன், ஒரு நபர் அல்லது உறவி னர் தங்கள் விருப்பத்துக்கு ஏற்ப இறந்த வரின் உடலை அடக்கம் அல்லது தக னம் செய்வதற்கு அனுமதிக்கும் புதிய சட்டத்தை அறிமுகப்படுத்த சட்டமூலம் ஒன்றைத் தயாரிப்பதற்கும் பிரேரிக்கப் பட்டுள்ளது. (ஐ)

## கறுப்பு ஜூலை...

ஜூலை வேண்டாம்" எனும் தொனிப்பொருளில் நினைவுகூரல் நிகழ்வு முன்னெடுக்கப்பட்டது.

இதில், பெரும் எண்ணிக்கையிலான வர்கள் பங்கேற்று தமது உறவினர்களை நினைவுகூர்ந்தனர். நிகழ்வில், பங்கேற்ற பிரதிநிதிகள் வன்முறை இடம்பெற்று இன்னமும் பாதிக்கப்பட்ட மக்களுக் கான நீதி நிலைநாட்டப்படவில்லை. தமிழ் மக்கள் பாதுகாப்பாகவும், நிம்மதி யாகவும் வாழமுடியாத அச்சுறுத்தல் நிலை தற்போதும் தொடர்கிறது என கருத் துரைத்தனர்.

நினைவுகூரலில் கலந்துகொண்ட வர்கள் சுற்றுவட்டத்தில் உள்ள நினை வுக்கல்லில் மெழுகுதிரிகள், விளக்கு களை ஏற்றி - மௌன அஞ்சலி செலுத் தினர்.

யாழ்ப்பாணத்தில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் முற்றவெளி மைதானத்தில் நினைவேந் தல் நடைபெற்றது. இதில், பொதுச் சுடர் ஏற்றப்பட்டு கலவரத்தில் கொல் லப்பட்ட உறவுகளுக்கு அஞ்சலி செலுத் தப்பட்டது.

கிளிநொச்சியில் இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் கிளிநொச்சி மாவட்ட பணிமனையில் நினைவேந்தல் கடைப் பிடிக்கப்பட்டது. இதன்போது, அண் மையில் காலமான தமிழீழ விடுதலை போராட்டத்தின் முன்னோடிகளில் ஒருவரும் தமிழீழ இராணுவ இயக்கத் தின் தலைவருமான தம்பாப்பிள்ளை மகேஸ்வரனுக்கும் (பனாகொட மகேஸ் வரன்) அஞ்சலி செலுத்தப்பட்டது. (ஐ)

## அமைதியை...

அதிகாரங்களின்படி நேற்று முன்தினம் திங்கட்கிழமை வெளியிட்ட அதிவிசேட வர்த்தமானி மூலம் இந்த உத்தரவை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பிறப் பித்துள்ளார்.

இதன்படி, நாட்டின் 25 நிர்வாக மாவட்டங்கள் மற்றும் கரையோர மாவட்டங்களை அண்மித்த ஆள்புல நீர் (கடல்)பரப்பிலும் அமைதியை பேண ஆயுதம் தாங்கிய படைகளின் சகல உறுப்பினர்களுக்கும் திங்கட்கிழமை முதல் நடைமுறைக்கு வரும்வகையில் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள் ளது. (ஐ)

## ஜனாதிபதி...

நடைபெறுமா இல்லையா அல்லது மாகாண சபைகள் அவசியமா இல்லையா என்ற நிலை உருவாகியுள் ளது. தேர்தல் முறைமை மாற்றம் என்ற பேரிலேயே மாகாண சபைத் தேர்தலை ஒத்திவைத்ததாக அப்போதைய அரசாங் கம் கூறியது. ஆனால், அப்போதைய அமைச்சரின் தீர்மானத்துக்கு அமைய மாகாண சபைத் தேர்தலை ஜனாதிபதி பிற்போட்டியிருந்தார். இன்று வரை மாகாண சபைத் தேர்தல் தொடர்பில் பேசப்படவில்லை. ஆளுநர்கள் மூலம் மாகாண சபைகள் நிர்வகிக்கப்படு கின்றன.

பொருளாதார நெருக்கடி மற்றும் போதிய நிதி இல்லாததால் தேர்தல்கள் ஒத்திவைக்கப்பட்டுள்ளன என்று ஜனா திபதி கூறுகிறார். ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் நாட்டில் நிச்சயமற்ற நிலை தோன்றியுள்ளது. தேர்தல் நடை பெறுமா இல்லையா என்பதை அரசாங் கம் கூற வேண்டும். உரிய தினத்தில் தேர்தல் நடத்தப்படுமா அல்லது பிற்போடப்படுமா என்பதையும் அரசாங்கம் கூற வேண்டும்.

இது இறுதி பாராளுமன்ற அமர்வா கக்கூட இருக்கலாம். 1983 ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட தீர்மானத்தை போன்ற தொரு தீர்மானமே எடுக்கப்படவுள்ளது. இதனால் நாட்டில் இரத்த ஆறே ஓடும். அன்று 64ஆயிரம் பேர் உயிரிழந்தனர் என்பதை நினைவுகூர விரும்புகிறேன்." என்றார்.

இதன்போது குறுக்கிட்ட ஆளும் தரப்பின் நிமல் லான்சா எம். பி.,

பாராளுமன்றத் தேர்தல் நடை பெறாது. ஜனாதிபதித் தேர்தல் உரிய காலப்பகுதியில் நடைபெறும் என்று ஜனாதிபதி நேற்று (நேற்றுமுன்தினம்) தெளிவாக கூறியிருந்தார். இவ்வாறான பின்புலத்தில் மக்களை குழப்பப் பொய்யை சோடிக்கின்றனர். உயிர்த்த ஞாயிறுதின தாக்குதல் இடம்பெற்றி ருந்த சந்தர்ப்பத்தில் - நாடு தீ வைக்கப் பட்ட தருணத்தில் சாகும்வரை உண்ணா விரத போராட்டம் இருந்தவர் ரத்ன தேரர். ஆகவே, உறுதியாக ஜனாதிபதித் தேர்தல் நடைபெறும்.

இந்த சர்ச்சைக்கு முற்றுப்புள்ளி வைக்கும் வகையில் கருத்து வெளியிட்ட இராஜாங்க அமைச்சர் ஜானக வக்கும் புர,

உரிய தினத்தில் ஜனாதிபதி தேர்தல் நடைபெறும். இந்த வாரம் தேர்தல் திகதியை அறிவிப்பதாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் கூறியுள் ளார். அரசாங்கம் என்ற ரீதியில் தேர்த லில் தலையிடமாட்டோம். தேர்தல்கள் ஆணைக்குழு உரிய காலத்தில் கட்டா யம் தேர்தலை நடத்தும். அதற்கான நிதியையும் வழங்கியுள்ளோம்.

பாராளுமன்றம் கலைக்கப்படாது என்பதையும் கூறுகிறோம். அடுத்த வருடம் ஒகஸ்ட் வரை பாராளுமன்றத் துக்கு ஆயுள்காலம் உள்ளது. மாகாண சபை தேர்தலை பழைய முறையில் நடத்த பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரன் யோசனை ஒன்றை முன் வைத்துள்ளார். அதற்கு ஆதரவளிக்க நாங்கள் தயாராக இருக்கிறோம் என்றா ர். (ஐ)

## கறுப்பு ஜூலைக்காக...

அமைச்சர், கோவிட் பெருந்தொற் றால் உயிரிழந்த முஸ்லிம் மக்களின் ஜனஸா க்கள் தகனம் செய்யப்பட்டமைக் காக அரசாங்கம் என்ற ரீதியில் மன் னிப்பு கோரினார். இதன்போதே நாட் டின் பிரஜை என்ற ரீதியில் கறுப்பு ஜூலை கலவரத்துக்காக மன்னிப்பு கோருவ தாக அவர் கூறினார்.

மேலும், "1983 ஜூலை 23 ஆம் திகதி இலங்கைக்கு கரும்புள்ளியாகக் காணப் படுகிறது. 41 வருடங்களுக்கு முன்னர் நேர்ந்த சம்பவங்கள் பெரும் விளைவு களை ஏற்படுத்தின. அக்காலப்பகுதியில் நாங்கள் அரசியலில் ஈடுபடவில்லை. இருப்பினும், நாட்டின் பிரஜை என்ற ரீதியில் தமிழர்களிடம் மன்னிப்புக் கோருகிறேன் - என்றார்.

1983 ஜூலை 23ஆம் திகதி கொழும் பில் திட்டமிட்ட ரீதியில் பேரினவாத கும்பலால் நடத்தப்பட்ட வன்முறை களில் 4 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தமிழ் மக்கள் வெட்டியும் - எரித்தும் - சித்திரவதைகளுக்கு உள்ளாக்கியும் கொல்லப்பட்டனர். பலர் அவயவங் களை இழந்தனர். பல பெண்கள் வன்பு ணர்வுக்கு உள்ளாக்கப்பட்டனர். பல்லா யிரக்கணக்கானவர்கள் உடைமைகள், சொத்துகளை இழந்து தென்னிலங்கை யிலிருந்து துரத்தப்பட்டார்கள். இந்த சம்பவத்துக்கு அரசாங்கம் இதுவரை மன்னிப்புக் கோரவில்லை என்பது குறிப் பிடத்தக்கது. (ஐ)

## பெரமுனவின் கூட்டத்தில்...

எம். பியும் வேறு சிலரும் வலியுறுத்தி யுள்ளனர்.

இதைத் தொடர்ந்து அந்தக் கட்சி யின் கூட்டத்தில் கடும் வாதப்பிரதிவா தங்கள் இடம்பெற்றன. எனினும், பொதுஜன பெரமுன அடுத்த வாரம் தனது நிலைப்பாட்டை வெளிப்படுத் தும் என்று தெரிவிக்கப்பட்டது.

சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் யார் என்று தீர் மானம் எடுப்பதற்காக அந்தக் கட்சியி னர் நேற்று தமது தலைமை பணிமனை யில் கூடினர். பொதுஜன பெரமுன கட்சியின் தலைவர் மகிந்த ராஜபக்ஷ தலைமையில் நடந்த இந்தக் கூட்டத்தில் அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர் கள், எம். பிக்கள், தொகுதி அமைப்பா ளர்கள் என 75 பேருக்கும் அதிகமான வர்கள் பங்கேற்றனர்.

கூட்டத்தின் பின்னர் செய்தியாளர் களுக்கு கருத்து வெளியிட்ட அமைச்சர் பிரசன்ன ரணதுங்க, "எனது நிலைப் பாட்டில் இருந்து ஒருபோதும் மாற மாட்டோம். நாட்டையும் நாட்டு மக்க ளையும் காப்பாற்றிய ரணில் விக்ரம சிங்கவை ஜனாதிபதி வேட்பாளராக களமிறக்க வேண்டும். பொதுஜன பெர முன அதற்கு முழுமையான ஆதரவை வழங்க வேண்டும். எதிர்வரும் வாரம் இதுதொடர்பில் பொதுஜன பெரமுன தமது நிலைப்பாட்டை வெளிப் படுத்தும்." என்றார்.

பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ குட்டியாராச்சி கருத்து வெளியிடு கையில்,

"பிரசன்ன ரணதுங்க அமைச்சரவை யில் இருக்கும் அமைச்சர். அவர் ஜனாதி பதியை ஆதரித்தே கருத்து வெளியிட வேண்டும். ஆனால், எமக்கென்று கட்சியொன்று உள்ளது. அந்த கட்சியின் சார்பில் வேட்பாளர் ஒருவர் களமிறக்கப் பட வேண்டும். அதில் நாம் உறுதியாக இருக்கிறோம்." என்றார். (ஐ)

## பெரமுன....

எமது கட்சியின் சார்பில் போட்டி யிடுவதற்கு பலரின் பெயர்கள் பரிந்து ரைக்கப்பட்டுள்ளன. இருப்பினும், இன்னும் இறுதித் தீர்மானம் எட்டப் படவில்லை. பொதுஜன பெரமுன வெற்றி பெறும் நிலையிலேயே இருக்கி றது. நான் மனதில் வைத்துள்ள வேட்பா ளர் யார் என்பதை இப்போது கூற முடியாது - என்றும் அவர் கூறினார். (ஐ)

## கோட்டாபய...

"கோட்டா கோ ஹோம்" போராட் டத்தில் பங்கேற்ற பெருந்தொகை மக் கள் கடந்த 2022 ஜூலை 9ஆம் திகதி ஜனாதிபதி மாளிகை, ஜனாதிபதி செய லகம் என்பவற்றை முற்றுகையிட்ட னர். அங்கிருந்து தப்பியோடிய கோட்டாபய ராஜபக்ஷ பின்னர், மாலைதீவுக்கு தப்பிச் சென்றிருந்தார்.

அவர், அங்கிருந்து தப்பிச் செல்ல விமானப் படையின் விமானம் பயன் படுத்தப்பட்டது. இதற்கான செலவை விமானப் படையே ஏற்றது. எனினும், இந்த பயணத்துக்கான செலவுத் தொகையை விமானப் படை வெளியி டவில்லை.

இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் தலைவர், நிறைவேற்று அதிகாரமுள்ள அரசாங்கத்தின் தலைவர், முப்படைகளின் தளபதி என்ற அடிப் படையில் அவருக்கான செல்வை விமா னப் படையே செலுத்தியதாகவும் இதற்கு அரசமைப்பின் சரத்து 30(1) இடமளித்துள்ளதாகவும் விமானப்படை தெரிவித்துள்ளது.

மேலும், 2022 ஜூலை 13 அன்று அதிகாலை, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, அவரின் மனைவி மற்றும் இரு மெய்ப்பாதுகாவலர்கள் மாலை தீவுக்கு விமானப்படை விமானத்தில் பயணித்திருந்தனர் என்றும் தெரிவிக்கப் (ஐ)

## தமிழ்...

நியாயமான கோரிக்கைகளை மனிதாபிமான மற்றும் தமிழர்கள் என்ற முறையில் நாம் ஆதரித்து வந்திருக்கி றோம். இலங்கை தொழிலாளர் காங்கிர ஸின் நிறுவிய தலைவர் சௌமியமூர்த்தி தொண்டமான் இவ்விடயத்தில் சரியான நிலைப்பாட்டை கொண்டிருந்தார்.

எனினும், சில தென்னிலங்கை தமிழ் கட்சிகளின் தலைவர்கள் எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் வட, கிழக்கு மக்க ளின் இரண்டாவது வாக்கை தாம் ஆதரிக்கப்போகின்ற வேட்பாளருக்கு வழங்குமாறு கோரப்போவதாக பகிரங்க மாக தெரிவித்துள்ளனர். இது தேவை யற்ற - வெறுமனே மூக்கை நுழைக்கும் விடயமாகும். வட, கிழக்கு மக்களின் கோரிக்கைக்கு உதவாவிட்டாலும் பரவாயில்லை அவர்களுக்கு உபத்திரம் கொடுப்பதாக இருக்கக்கூடாது.

வட, கிழக்கு மக்களின் இரண்டாவது அல்லது மூன்றாவது வாக்கை யாருக்கு வழங்குவது என்பதை அந்த மக்களை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற கட்சிகளி டமே விட்டுவிட வேண்டும். அதேநேரத் தில் வட, கிழக்கு மலையக மக்களுக்கு இலங்கையர் என்ற அடிப்படையில் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் எவருக்கும் வாக்களிக்கும் உரிமை இருக்கிறது.

கடந்த காலங்களில் இந்த நாட்டின் ஜனாதிபதி பதவியை அலங்கரித்த தலைவர்கள் சிறுபான்மை மக்களின் விடயங்களை கையாள்வதில் ஒரு திருப்திகரமான போக்கைக் கடைப் பிடிக்கவில்லை என்பது இரகசியமான விடயம் அல்ல.

இந்த நிலையில் வட, கிழக்கு மக்கள் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தாங்களுக்கு பொருத்தமான தீர்மானம் ஒன்றை எடுப்பதில் எவ்வித தவறும் இருக்க முடியாது. அது அவர்களின் ஜன நாயக உரிமையாகும் - என்றுள்ளது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# மூடப்படும் அபாயத்தில் பல தொழிற்சாலைகள்!

## 15,000 பேர் வேலை இழக்கும் நிலை

கொழும்பு, ஜுலை 24

**இலங்கையில் தேங்காய் எண்ணெய் சுத்திகரிப்பு தொழிற் சாலைகள் பல மூடப்படும் அபாயத்தில் உள்ளதாக விவசாய மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்தார்.**



இதன் காரணமாக தொழிற் சாலைகளில் பணிபுரியும் சுமார் 15,000 பேர் வேலை இழக்கும் அபா யம் உள்ளதாகவும் அமைச்சர் குறிப் பிட்டார்.

நாட்டிலுள்ள தேங்காய் எண் ணெய் சுத்திகரிப்பாளர்களுக்கு நிவாரணம் வழங்குவது தொடர்பில் கலந்துரையாடுவதற்கு அமைச்சர வைப் பத்திரத்தை சமர்ப்பிக்குமாறு நேற்று முன் தினம் விவசாய மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச் சர் மஹிந்த அமரவீரவுக்கு ஜனாதி பதி பணிப்புரை விடுத்துள்ளார்.

மேலும், சுத்திகரிக்கப்படாத தேங்காய் எண்ணெயை இறக்குமதி செய்யும்போது துறைமுகத்தில் செலுத்தப்படும் வரிக்கு மேலதிக மாக, தேங்காய் எண்ணெய் சுத்தி கரிக்கப்பட்ட பின்னர் வரி செலுத்த வேண்டியிருப்பதால் தேங்காய் எண்ணெய் சுத்திகரிப்பு தொழிற் சாலைகள் மூடப்படும் அபாயம் இருப்பதாக அமைச்சர் சுட்டிக்காட் டினார். (அ)

# சம்பள முரண்பாடுகளை நிவர்த்தி செய்ய யோசனைகளை கோருகிறது நிபுணர் குழு

கொழும்பு, ஜுலை 24

அரச சேவையில் நிலவும் சம்பள முரண்பாடுகளை நிவர்த்தி செய்வ தற்கு நியமிக்கப்பட்ட நிபுணர் குழு சம்பளக் கொடுப்பனவுகளை திருத் துவதற்கான யோசனைகளை கோர ஆரம்பித்துள்ளதாக ஜனாதிபதி அலுவலகம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பான விண்ணப்பப் படிவத்தை ஜனாதிபதியின் அலு வலகத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளமான www.president soffice.gov.lk இலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ள முடியும் என்றும் தெரிவித்துள்ளது.

மற்றும் அனைத்து முன்மொழி வுகளின் மென் நகலையும் PDF வடி வில் saec@presidentsoffice.lk என்ற மின்னஞ்சல் முகவரிக்கு ஒகஸ்ட் 09 ஆம் திகதி அல்லது அதற்கு முன் னர் அனுப்பலாம் என்று ஜனாதிபதி அலுவலகம் குறிப்பிட்டுள்ளது. (அ)

# இறக்குமதியாகும் பொருட்களின் விலைகள் அதிகரிக்கும் அபாயம்!

கொழும்பு, ஜுலை 24

இறக்குமதி செய்யப்பட்ட கொள்கலன்களை பரிசோதித்து வெளியிடுவதற்கு அதிக கால அவகாசம் தேவைப்படுவதாக கொள்கலன் போக்குவரத்து வாகன உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

40 அடி கொள்கலனில் பல வகையான பொருட் களை இறக்குமதி செய்யும் போக்கு அதிகரித்துள்ளதாக அதன் தலைவர் சனத் மஞ்சுள தெரிவித்தார்.

இவ்வாறானதொரு பின்னணியில் எதிர்காலத்தில் இறக்குமதி செய்யப்படும் பொருட்களின் விலைகள் அதிகரிக்கும் அபாயம் காணப்படுவதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

2024 ஆம் ஆண்டு இறுதிக்குள் துறைமுக அதிகார சபையுடன் தொடர்புடைய சுமார் 20,000 வேலை வாய்ப்புகள் உருவாக்கப்படும் என துறைமுகங்கள், கப்பல் மற்றும் விமானப் போக்குவரத்து அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளமை குறிப்பி டத்தக்கது. (அ)

# சாதாரண தர பரீட்சை பெறுபேறு செப்ரெம்பரில்!

## கல்வி அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, ஜுலை 24

க. பொ. த. சாதாரண தர பரீட்சை பெறுபேறுகளை செப்ரெம்பர் மாதம் வெளியிட பரீட்சை திணைக்களம் தயாராகி வருவதாக கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த தெரிவித்துள்ளார்

நேற்று செவ்வாய்க்கிழமை கம்பஹா - ஹோமாகம வில் நடைபெற்ற நிகழ்வில் உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இதேவேளை, பாடசாலைகளுடன் இணைக்கப்பட் டுள்ள அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் பிரச்னை தொடர்பில் இணக்கம் காணப்பட்டுள்ளது. அது தொடர்பான வர்த்தமானியை நீதிமன்றத்தில் சமர்ப் பிக்க முடியும். வழக்கு விசாரணை முடிந்த பின்னர் அடுத்த வாரத்துக்குள் நியமனங்கள் வழங்கப்படும்.

தற்போது, 6 ஆயிரம் அபிவிருத்தி உத்தியோகத்தர் களில் 23 பேர் வெற்றிடங்களுக்கு ஆசிரியர்களாக நிய மிக்கப்பட்டுள்ளனர். மீதமுள்ளோருக்கு நேர்முகத் தேர்வு நடத்தி நியமனங்கள் விரைவில் வழங்கப்படும் - என்றும் அவர் கூறினார். (ஐ)

## சாய்ந்தமருது கொலை சம்பவம்

# பிரதான சந்தேக நபர் உட்பட ஐவருக்கு 14 நாட்கள் மறியல்

சாய்ந்தமருது, ஜுலை 24

தனது மாமனாரை தாக்கி கொலை செய்ததாக குற்றஞ் சாட்டப்பட்ட பிரதான சந்தேக நபர் உட்பட ஐவரை 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறு கல்முனை நீதிவான் நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

இந்த வழக்கு திங்கட்கிழமை கல்முனை நீதிமன்ற நீதி வான் எஸ். எம் சம்சுதீன் முன்னிலையில் விசார ணைக்கு எடுத்து கொள்ளப் பட்ட நிலையில் பொலிஸாரின் சமர்ப்பணம் உள்ளிட்ட வாதி பிரதிவாதிகளின் சட்டத்தரணிகள் ஆகியோரின் சமர்ப்பண வாதங் களை ஆராய்ந்த பின்னர் ஐவரையும் எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் 05 ஆம் திகதி விளக்கமறியலில் வைக்க மாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை அதிக ாலை அம்பாறை, சாய்ந்தமருது பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பொலி வேரியன் கிராமத்தில் 62 வயதுடைய மீராசாஹிப் சின்னராசா என்பவர் கொலை செய்யப்பட்டார். இந்த நிலையி லேயே ஐவர் கைது செய யப்பட்டு 14 நாட்கள் விளக்க மறி யலில் வைக்கப்பட்டுள்ளனர். (எ)

# நெடுந்தீவுக் கடற்பரப்பில் 9 இந்திய மீனவர்கள் கைது!

யாழ்ப்பாணம், ஜுலை 24

இலங்கை கடற்பரப்புக்குள் நுழைந்து சட்டவிரோத மாக மீன்பிடியில் ஈடுபட்ட 9 இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று அதிகாலை சுமார் 2 மணியளவில் இலங்கை இந்திய சர்வதேச கடல் எல்லைக்கும் நெடுந்தீவுக்கும் இடையே மீன்பிடித்துக் கொண்டிருக்கும்போதே, இரா மேஸ்வரம் மீனவர்கள் 9 பேரும் கைதுசெய்யப்பட்டனர்.

அப்பகுதியில் ரோந்து பணியில் ஈடுபட்ட இலங்கை கடற்படையினர் இவர்களை கைது செய்ததோடு, இரண்டு விசை படகுகளையும் கைப்பற்றினர்.

கைது செய்யப்பட்ட மீனவர்கள் காங்கேசன்துறை கடற்கரை முகாமுக்கு அழைத்து வரப்பட்டு, முதற்கட்ட விசாரணையைத் தொடர்ந்து, யாழ்ப்பாணம் மீன் வளத்துறை அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

விசாரணைக்கு பின்னர் மீனவர்கள் ஊர்காவற்துறை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டு விளக்கமறி யலில் வைக்கப்பட்டதாக மீன்வளத்துறை அதிகாரிகள் தெரிவித்தனர். (அ)

# வாக்களிப்புக்கு அவசியமான பொருட்கள் உடன் கொள்வனவு

கொழும்பு, ஜுலை 24

தேர்தல் வாக்களிப்புக்கு அவசியமான அழியாத மை உள்ளிட்ட ஆவணப் பொருட்களை உடனடியாகக் கொள்வனவு செய்யத் தேர்தல்கள் ஆணைக்குழு தீர்மா னித்துள்ளது.

இதன்படி மை, கடித உறை, பேனா, பென்சில், காகிதம் உள்ளிட்ட வாக்களிப்புக்காகப் பயன்படுத்தப் படும் பொருட்களைக் கொள்வனவு செய்வதற்கான விலைமனு கோரப்படவுள்ளது.

கிடைக்கப்பெறவுள்ள விலை மனு கோரல் விண்ணப் பங்களை எதிர்வரும், ஒகஸ்ட் மாதம் 2ஆம் திகதி திறக் கத் தீர்மானித்துள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரி வித்துள்ளது. (அ)

# மாகாண அதிகாரிகளுக்கு எதிராக உடன் நடவடிக்கை!

## பொலிஸ் மா அதிபருக்கு தேர்தல் ஆணைக்குழு கடிதம்

கொழும்பு, ஜுலை 24

உள்ளூராட்சி நிறுவனங்களின் அபிவிருத்தி நடவடிக் கைகளை மேற்பார்வையிடுவதற்காக முன்னாள் உள்ளூ ராட்சி பிரதிநிதிகளுக்கு வழங்கப்பட்ட நியமனங்களை இரத்து செய்யாத மாகாண அதிகாரிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு பொலிஸ் மா அதிபர் தேச பந்து தென்னக்கோனிடம் தேர்தல்கள் ஆணைக்குழு கோரியுள்ளது.

குறித்த மேற்பார்வை செயற்பாட்டிற்காக ஒத்திவைக் கப்பட்ட தேர்தல்கள் தொடர்பாக முன்னாள் உள்ளூ ராட்சி பிரதிநிதிகள் மற்றும் வேட்பாளர்கள் வேட்பு மனு தாக்கல் செய்திருந்தனர்.

இந்நிலையில், அவர்களுக்கு நியமனம் வழங்கப் பட்ட தாக சில மாகாண ஆளுநர்கள், தேர்தல் கண்காணிப் பாளர்கள் உட்பட கட்சி ஆணைக்குழு விடம் அண்மை யில் முறைப்பாடுகளை சமர்ப்பித்தி ருந்தனர்.

இது தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழு பொலிஸ் மா அதிபருக்கு அனுப்பியுள்ள கடிதத்தின் பிர காரம், தெற்கு மற்றும் கிழக்கு மாகாண ஆளுநர்கள் உரிய அழைப்பாணையை இரத்துச் செய்த நிலையில், மேல் மற்றும் மத்திய மாகாண ஆளுநர்கள் இதுவரை உரிய பதில் அளிக்கவில்லை.

இதனைத் தொடர்ந்து, இது தொடர்பாக நேரடியாக இரு மாகாண ஆளுநர்களுக்கும் தேர்தல் ஆணையகம் நினைவூட்டல் கடிதம் அனுப்பியிருந்தது.

இருப்பினும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படாத நிலையிலேயே குறித்த நியமனங்களை இரத்து செய்யாத மாகாண ஆளுநர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கு மாறு பொலிஸ் மா அதிபரிடம் கோரப்பட்டுள்ளது.

இதற்கிடையில், ஜனாதிபதித் தேர்தல் திகதியை தேர்தல்கள் ஆணைக்குழு இந்த வாரம் அறிவிக்கவுள்ள துடன், அது தொடர்பான கலந்துரையாடல் இன்று இடம்பெறவுள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 24.07.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.